திராவிடநாடு

15—9—57 | வார வெளியீடு | விலை 0—2—6

# ஏன் தூங்குகின்றாய்?

—[ பொன்னி வளவன் ]—

உயர்வென்று உயிரென்று எண்ணு! – உண்ண
உணவொத்த தமிழின்பம் உண்ணு! – நெஞ்ச
அயர்வின்றிப் பகைவென்ற முன்னோர் – இன்பம்
அளித்திட்ட நிலையெங்கு போச்சு? – கொஞ்சம்
துயில்கின்ற நிலைகொண்டு விட்டாய்? – வந்தோர்
துயர்கொண்டு தாழ்வாகிக் கெட்டாய்! – இன்ப
இயலோடு இசைகொண்ட தமிழா! – இன்னும்
ஏன்வீணில் நீதூங்கு கின்றாய்?
ஏடோடு மேடைகள் எல்லாம் – உன்றன்
இனம்காக்க முரசங்கள் ஆகும் – இந்த
நாடுடு தொல்லைகள் எல்லாம் – இன்றே
நகர்ந்தேகி நலமாகு வண்ணம் – பாட்டுப்
பாடாது கதைகட்டு ரைகள் – இங்குப்
பாங்காகத் தீட்டாமல் வீணில் – நன்மை
தேடாமல் திறமின்றித் தீயர் – தொல்லைத்
திறம்கொள்ள ஏன் தூங்கு கின்றாய்?

# புதிய மலேயா

[ கோ. கோதண்டராமன் ]

1957 ஆகஸ்டு மாதம் 31-ந் தேதி 60 லட்சம் மலேய மக்கள், தங்களின் அடிமைத் தளைகளைத் தகர்த்தெறிந்து, விடுதலையடைந்த நன்னாள். சுமார் ஒரு நூற்றாண்டுக்கு மேலாகச் சுரண்டல் ஆட்சியை நடத்திய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம், அமைதியான முறையில் மலேய நாடுகளுக்குச் சுதந்திரம் அளிக்க முன்வந்தது உண்மையில் பாராட்டுக்குரியதாகும். மலாய் நாடுகளின் சுதந்திர வரலாற்றில், வேற்று நாட்டுச் சரித்திரங்களில் காணப்படுவதைப்போல், கறைபடிந்த சம்பவங்கள் கிடையாது. இரண்டாவதுஉலகப் போருக்கு முன், மேனாடுகளின் குடியேற்ற நாடுகளாக விளங்கிய எண்ணிறந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகள் இன்று சர்வ சுதந்திர நாடுகளாக மாறியுள்ளதைக் காணும் இடத்து, ஏகாதிபத்திய வாதிகள் காலம் மாறுவதை உணர்கிறார்கள் என்ற உண்மையும், ஆசிய ஆப்பிரிக்க மக்களிடத்தில் எழுந்துள்ள அரசியல் விழிப்புணர்ச்சியும் நன்கு புலப்படும்.

மலேய பெடரேஷன் ஒன்பது சுதேச அரசுகளையும், பினாங்கு, மலாக்கா என்ற இருபகுதிகளையும் உள்ளிட்டதாகும். மேற் குறித்த ஒன்பது நாடுகளில் சுதேச அரசர்கள் ஆட்சி செலுத்திவந்தனர். பினாங்கு மலாக்கா என்ற இரு பிரிட்டிஷ் காலனிகளும் பிரிட்டனின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தன. மலாய் நாடுகளில், ரப்பர், ஈயம் போன்ற பொருள்கள் மண்டிக் கிடப்பதால், பொருளாதாரத் துறையில் அவை மேம்பட்டு விளங்குகின்றன. மலாய் நாட்டில், மலேயர்கள், சீனர்கள், இந்தியர்கள் (பெரும்பாலும் தமிழர்கள்) என்ற மூன்று இனத்தவர்கள் வாழுகிறார்கள். வேறுபட்ட மூவினத்தவர் வாழ்ந்தபோதிலும் அவர்களிடையே நிலவிய ஒற்றுமையும், அவர்கள் விரைவில் விடுதலை பெறுவதற்குப் பெரிதும் உறுதுணையாக நின்றது எனில் அது மிகையாகாது. சுருங்கக் கூறின் மலேய நாடுகளின் அரசியல் வரலாறு கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் தொடங்கியது என்னலாம். ஆனால் இவ்வளவு குறுகிய காலத்தில், இந்நாட்டின் விடுதலை வரலாறு மிகத் துரிதமாகவே வளர்ந்துவந்திருக்கிறது இரண்டாவது உலகப் போருக்குமுன் இந்நாட்டில் அரசியல் விழிப்புணர்ச்சி அவ்வளவாக வளரவில்லை எனத் துணிந்து கூறலாம். ஜப்பானியரிடம் இருந்து மறுமுறை ஆங்கிலேயர் மலேயாவைக் கைப்பற்றிய பின்புதான், மலாய் மக்கள் குடியேற்ற மனப்பான்மையை எதிர்க்க ஆரம்பித்தனர்.

*

ஐக்கிய மலேய தேசீயச் சங்கம் 1955-ம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் பெடரல் சட்டசபையில் மொத்தம் 52 இடங்களில் 51 இடங்களைக் கைப்பற்றியது. இவ்வாறு உருவான விடுதலை இயக்கம் துங்குவின் ஒப்பற்ற தலைமையில் சுதந்தரப் பாதையை நோக்கி முன்னேறிக்கொண்டிருந்தது. துங்கு அரச குடும்பத்தைச் சேர்ந்தவரானதால், சுதேச நாட்டுச் சுல்தான்கள் அவரைப் பூரணமாக நம்பினர். மக்களும் அவர்மீது மட்டிலா நம்பிக்கை வைத்திருந்தனர். இவ்வாறு அரச பரம்பரைக்கும் நாட்டு மக்களுக்கும் இடையில் துங்கு அவர்கள் ஒரு பாலமென அமைத்திருந்தார் துங்கு அப்துல் ரஹ்மான் பெடரல் சர்க்காரின் முதன் மந்திரியாகப் பதவி ஏற்றதும், 1956-ம் ஆண்டில் நாட்டின் பூரண சுதந்தரத்தைப் பற்றிய மாநாடொன்றை நடத்துவதென ஐக்கிய மலேய தேசீய சங்கம் முடிவு செய்தது. இம்முடிவுக்கேற்ப 1956-ம் ஆண்டு ஜனவரி, பிப்ரவரி மாதங்களில் நடந்த இலண்டன் மாநாட்டில் மலேயாவுக்கு 1957-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் சுதந்திரம் வழங்குவதெனத் தீர்மானிக்கப்பட்டது. இதே மாநாட்டில் மலேயாவுக்கு அரசியலமைப்பு தயாரிக்கக் கமிஷன் ஒன்றை நிறுவுவதென முடிவு செய்யப்பட்டது. இந்தக் கமிஷனுக்கு ரீட் என்பவர் தலைவராக நியமிக்கப்பட்டார். கமிஷனின் உறுப்பினர்கள் பிரிட்டன் இந்தியா பாகிஸ்தான், ஆஸ்திரேலிய நாடுகளில் இருந்து நியமிக்கப்பட்டனர்.

இந்தக் கமிஷன் தயாரித்த அரசியலமைப்புச் சட்டப்படி, மலேய அரசாங்கம் ஒரு பெடரேஷன் அல்லது கூட்டாட்சியாக இயங்கும். பெடரல் அரசாங்கம் இரு பிரதிநிதித்துவ பாராளுமன்ற சபைகளையும், மலேய மன்னர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படும் ஒரு பெடரல் அரசரையும் கொண்டு இயங்கும், ரீட் கமிஷனின் சிபார்சிற்கிணங்க பினாங்கும் மலாக்காவும் பிரிட்டிஷ் பிடியிலிருந்து ஆகஸ்டு 31-ந் தேதி விலகிவிட்டது. இதனால் மலேய பெடரல் அரசாங்கம் பதினொரு மாநிலங்கள் அல்லது சுதேச நாடுகளைக் கொண்டிருக்கும், ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு சுதேச மன்னர் அல்லது கவர்னர் தலைவராக இருப்பார். ஒவ்வொரு சுதேச நாட்டிலும் இரண்டு சபைகள் உண்டு. பெடரல் அரசாங்கம் மேற்கூறிய பதினொரு மாநிலங்களைப் பரிபாலிக்கும் மத்திய சர்க்காராக விளங்கும். இந்த மத்திய சர்க்கார் பாராளுமன்றத்திற்குட்பட்டுத் தன் ஆட்சியை நடத்தும். பாராளுமன்றத்தின் கீழ்ச் சபை, பிரதிநிதித்துவசபை என அழைக்கப்படும். இதன் உறுப்பினர்கள் பெடரல் அரசாங்கத்தின் ஆளுகைக்குட்பட்ட பல்வேறு தொகுதிகளில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவர். மேல்சபை 'செனட்' என்று அழைக்கப்படும். ஒவ்வொரு மாநிலத்தில் இருந்தும் இரண்டு உறுப்பினர்கள் வீதம் இச்சபையின் பிரதிநிதிகள் கலை, விஞ்ஞானம் போன்ற பொதுத் துறைகளில் இருந்தும் சில உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். சட்டங்களை அவசியமானபோது தாமதப்படுத்துவதுதான் செனட் சபையின் முக்கிய நோக்கமாகும். பெடரல் அரசாங்கத்தின் மன்னர்தான் ஏனைய மாநிலங்களுக்கெல்லாம் தலைவர். இந்தத் தலைவர் ஒன்பது சுதேச அரசர்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுவார் இவருடைய ஆயுட்காலம் ஐந்தாண்டுகளாக இருக்கும். இவருக்கு "யாங்-டி-பெர்டுவான் ஹாகாங்" என்று பெயர். இவ்வாறு சுதந்திர மலேயா குடியரசு நாடல்ல இங்கிலாந்தைப் போன்றே வரம்பு செய்யப்பட்ட முடியரசாகவே விளங்கும். இந்தியா, பாகிஸ்தான் இவைகளைப் போன்றே பிரிட்டிஷ் அரசகாமன்வெல்த்தின் தலைவராக இருப்பார். இவ்விதம் மலாய் நாடு முடியரசுக்குள் முடியரசாகத் திகழும்.

★

# தேர்தலில் குறி!

161 ஆண்டு சந்தா ரூ. 8 [15—9—57] தனிப் பிரதி 16-காசு [இதழ்

இந்தியத் துணைக்கண்டத்தில் நடைபெற்று முடிந்த பொதுத் தேர்தல்களும், இடைத் தேர்தல் களும் பல படிப்பினைகளை நமக்கு உணர்த்தியுள்ளன. பொதுமக்களில் எத்தனை பேர் வாக்களிப்பதில் எத்துணை ஆர்வம் காட்டுகின்றனர், அவர்களில் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றவர்களாக உள்ளவர் எத்துணை பேர் — வாக்குகளைச் சேர்ப்பதில் என்னென்ன முறைகள் இருக்கின்றன என்று பொது வாக அறிய இருக்கும் செய்திகள் தவிர, நடைமுறை யில் பலவகையான அநுபவங்களை நாம் பெற்றிருக் கின்றோம்.

"...சின்னம் என்னுடையது" என்று தேர்தல் நேரத்தில் ஒவ்வொரு அபேட்சகரும் படித்துப் படித்து வாக்காளர்களிடம் சொன்னார்கள். அந்தச் சின்னத்தைத் துண்டுக் காகிதங்களில் அச்சடித்துக் கொடுத்தார்கள். ஆனாலும் இன்னாருக்கு இன்ன சின்னம்தான் என்பதைத் தெரிந்துகொள்ளாத வாக்காளர்கள் பலபேர். தேர்தல் முடிவுகள் வெளி யானபோது பல தொகுதிகளில் செல்லாதவை என்று ஆயிரக்கணக்கான வாக்குகள் தள்ளப்பட் டன. இரட்டை உறுப்பினர் தொகுதியில் எப்படி வாக்களிப்பது என்பதில் பல தொல்லைகள் இருந் தன. சில இடங்களில் பாராளு மன்ற வாக்குச் சீட்டுகள் சட்ட மன்றப் பெட்டியிலும், சட்ட மன்ற சீட்டுகள் பாராளு மன்றப் பெட்டிகளிலுமாக மாறி மாறிக் கிடந்தன. சிலபேர் வாக்குச் சீட்டுகளைப் பெட்டிகளில் போடாமல், வெளியில் கொண்டுபோய் விட்டனர்.

இவ்வாறு பலவகைக் குழப்பங்களும், தொல்லை களும் நடைபெற்று முடிந்த தேர்தலில் நிகழ்ந்திருக் கிறது.

அப்போது ஒவ்வொரு அபேட்சகருக்கும் ஒவ் வொரு பெட்டி வீதம் வைக்கப்பட்டது. அதனால் தான் இவ்வளவு குழப்பங்களும் விளைகின்றன என்று மத்திய அரசினர் இப்போது புதிய ஒரு மாறுதல் செய்திருக்கின்றனர். இனி, அபேட்சகர் களின் பெயர்கள் எழுதப்பட்ட ஒரு சீட்டு வாக்காள ரிடம் தரப்படும். வாக்காளர் யாருக்குத் தம்முடைய வாக்கைத் தர எண்ணுகின்றாரோ, அவர் பெயருக்கு எதிரே ஒரு குறியிட்டு ஒரு பெட்டியில் அந்தச் சீட்டைப் போட்டுவிட வேண்டும். இதனால் மேலே குறிப்பிட்ட பல தொல்லைகளும நீங்கிவிடும் என்று பாராளுமன்றத்தில் சட்ட அமைச்சர் சென் அவர் கள் கூறியிருக்கிறார்கள்.

ஏட்டளவில் இது உண்மைதான். ஆனால் நம் முடைய நாட்டில் இன்று இது இயலக்கூடியது தானா என்பதனையும் பார்க்கவேண்டும்.

இதோ கோழி, சாவி, என்று பலப் பொருள் களைக் காட்டி அந்தச் சின்னம் உள்ள பெட்டியில் சீட்டைப்போடு என்று சொல்லிக்கொடுக்கும்போதே பலர் அதைக்கூட நினைவில் வைத்திருக்க முடியா மல், "என்னமோ முதல் பெட்டியில் போட்டேன் எனக்கென்ன தெரியும்?" என்று ஏதோ ஒரு பெட் டியில் போட்டுவிட வேண்டும் என்று கருதுகின்றார் கள். பொது இடங்களில் ஆண்கள் "பெண்கள்" என்று எழுதுவதோடு மட்டுமில்லாமல் ஆண் பட மும் பெண்படமும் போட்டுக் காட்ட வேண்டியிருக் கிறது நம்முடைய நாட்டு நிலை.

இந்த நிலையில் ஒரே பெட்டியை வைத்து வாக் குச் சீட்டில் குறிபோட வேண்டும் என்றால் அதனால் எவ்வளவு பேருக்குப் புரியாத தொல்லை இருக்கிறது என்பதைப் பார்க்கவேண்டும்.

புதிய முறையில் பல பெட்டிகள் வைக்கும் தொல்லை இல்லை, ஒரே பெட்டியாக இருக்கும் என்று ஒரு நன்மையைக் காட்டினால், முன்னே இருந்ததை விட பெரிய வாக்குச் சீட்டு அச்சடிக்க வேண்டிய தொல்லை வருகின்றது.

புதிய முறை பலவகையில் நன்மை பயக்கக் கூடி யதுதான் எனினும், எல்லோருக்கும் அதைப் புரிந்துகொள்ளுகின்ற பருவமும் பக்குவமும் வரு கின்ற வரை அதை அமுலாக்கிட வேண்டும் என்ற அவசரம் கூடாது.

பாராளுமன்றத்திலும் ஒரே ஒரு உறுப்பினர் தான் புதிய வாக்குமுறையை ஆதரித்துப் பேசி யுள்ளார். எனவே, அரசாங்கம் இந்தப் புதிய முயற் சியில் ஈடுபடும்போது விழிப்போடும், பொறுப் போடும், இந்த முறை பயன் அளிக்குமா என்றும் முடிவு செய்து நடந்துகொள்ள வேண்டும்.

★

# அறப்போர் முடிவு

மூன்று வாரங்கள்! மூச்சடக்கி முத்தெடுக்கும் இனத்தைச் சேர்ந்த ஏழை உழவர்கள், எது வரினும் சரியென்று மூன்று வாரங்கள், துணிந்து நின்றனர்!! ஆளும் அரசு, சமரசக் கண்ணை வீசுவதும் அதே சமயத்தில் துப்பாக்கிப் படையையும் போலீஸ் பட்டாளத்தைக் கொண்டு குவிப்பதுமாக இருந்தது. 158 விவசாயத்தொழிலாளர்கள் கைதும் செய்யப்பட்டார்கள்! எனினும் என்ன!! கடைசியில், வழக்கம் போல, நீதி வென்றது—குளித்தலை வட்ட மிராசுதாரர்கள் பணிந்தனர்—குளித்தலை வட்ட விவசாய முன்னேற்ற சங்கத்தின் கோரிக்கைகளை ஏற்றனர்—வெற்றி நமது தோழர்களை நாடி வந்திருக்கிறது.

எங்கே கொண்டு விடுமோ?—என்கிற அளவுக்கு இருந்த நிலைமையில், "விவசாயிகளை எக்காரணத்தைக்கொண்டும் வெளியேற்றுவதில்லை," என்கிற முக்கிய உறுதி மொழியோடு, பாட்டாளிகள் விரும்பிய பல கோரிக்கைகளையும் ஒப்புக் கொண்டிருக்கின்றனர், மிராசுதாரர்கள். இந்த ஒப்பந்தம் ஏற்படுவதில் நமது கழகத் தோழர்களும் அன்பில்-தர்மலிங்கம், முத்துகிருஷ்ணன், முத்து ஆகியோர் முன்னின்று ஆவன செய்திருக்கின்றனர். அந்த வட்டார சட்டசபைப் பிரதிநிதியான கருணாநிதியும், இருதரப்பிலும் சுமுகமான நிலைமை உருவாக ஆவன செய்திருக்கிறார்.

இந்நிலையை வளர்க்க, மிராசுதாரர்களும், அரசும் ஆவன செய்யும் என எதிர்பார்க்கிறோம்.

வளரும் யுகத்தில், பிடிவாதமும், ஆதிக்கப் போக்கும் பயன்படாது என்பதையும் ஆதிக்கம் செலுத்துவோர் உணரவேண்டும். இதையே, 'நங்கவரம்' உணர்த்துகிறது, குளித்தலை வட்டாரத்துக்கு மட்டுமல்ல; நாட்டுக்கு.

---

# எழுச்சி

டில்லி ஆதிக்கம் விடாப் பிடியாக இந்தியைத் திணிக்கச் செய்யும் அக்கிரமத்தை எதிர்த்து கல்லூரி மாணவ மணிகள் தமது கண்டனத்தைக் காட்டியிருக்கிறார்கள். குடந்தை, விருதுநகர், காரைக்குடி, காஞ்சி, சென்னை முதலான இடங்களில் ஊர்வலமாகச் சென்றும், பொதுக்கூட்டங்கள் நடத்தியும் தமது அதிருப்தியைக் காட்டிக்கொண்டிருக்கின்றனர். வரப்போகும், கிளர்ச்சிக்கு பூபாளம் என்போம் இதனை! தாய்மொழியினைக் காப்போருக்கு மாணவ மணிகள் தரும் இந்த ஊக்கமும் உற்சாகமும் மகிழ்ச்சியையே தருகிறது. எத்தனை தடவைகள் ஓட ஓட விரட்டினாலும் இந்தி மீண்டும் பாய்கிறது! தென்னகத்தின் சார்பில் பாராளு மன்றத்தில் வீற்றிருப்போரும் இம்முறை, இந்தித் திணிப்பை எதிர்ப்பதென்கிற முடிவுக்கு வந்துள்ளனராம். காங்கிரஸ் உறுப்பினர்களுக்கும் இந்த ஆர்வம் வந்திருப்பதாக அறிவிக்கப்படுகிறது! இந்த சூழ்நிலையில் வரப்போகும் 21, 22 தேதிகளில் திருவண்ணாமலையில் நடை பெறவிருக்கும் வட ஆற்கா மாவட்ட தி. மு. கழக மாநாட்டி முதல் நாள் "இந்தி எதிர்ப் மாநாடும்", நடைபெறவிருக்கிறது 1938-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப் போராட்டத்தில் சர்வாதிகா யாகப் பணியாற்றிய சுவா அருணகிரிநாதர் தலைமையி அந்த இந்திப் போரில் சிறை சென்ற காஞ்சி சி.வி.எம். அண்ண மலை திறந்துவைக்க, மேற்ப மாநாடு நடைபெறவிருக்கிறது மாநாட்டில், வாட்டிடும் இந் குறித்து, தீர்மானங்கள் செய்ய படக்கூடும்.

இந்தித் தொல்லையை ஒழித் லன்றி நாமும் நம் மொழியும் வா வழியில்லை! இதனை உணர்ந் நிற்கும் மாணவ மணிகளின் எழு சியை வரவேற்கிறோம்—வாழ்த் கிறோம்.

★

---

# திரு. எஸ். இராமலிங்கம் மறைவு

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களின் மாமனாரும், டாக்டர் விசாலாட்சி அவர்களின் தந்தையாருமான திரு. **எஸ். இராமலிங்கம்** அவர்கள் 10-9-57 இரவு 8-45 மணிக்கு பூவிருந்தவல்லியில் இயற்கை யெய்தினார் என்ற செய்தியை மிக்க வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

திரு. எஸ். இராமலிங்கம் அவர்கள் சேலத்தில் பெருங்குடும்பத்தில் பிறந்து, சிறு வயதிலேயே எஞ்சினீயரிங் படிப்பை முடித்து, சென்னை மாநிலத்தில் பல இடங்களில் எஞ்சினீயர் வேலை பார்த்தார்.

அவர் நேர்மைக்கும், நாணயத்திற்கும், திறமைக்கும் பெயர் போனவர்.

இறுதியாக 1943-ம் ஆண்டு வடஆற்காடு மாவட்டம் வேலூரில் முனிசிபல் எஞ்சினீயரா இருந்து ஓய்வுபெற்றார்.

இப்பொழுது அவருக் வயது 71 ஆகும்; அவ மனைவி மாணிக்கத்தம்மா அவர்களையும், டாக்டர் விச லாட்சி, ஞானசுந்தரி, நடராச ஆகிய மக்களையும், விட்டு பிரிந்து விட்டார். அவ சென்ற $1\frac{1}{2}$ ஆண்டுக் காலமா நோய்வாய்ப்பட்டிருந்தார்.

திரு. இரா. நெடுஞ்செழிய எம். ஏ. அவர்களும், தி எம். எஸ். பிறைகபாணி எம். அவர்களும் அன்னாருக் மருமக்களாவர்.

அன்னாரின் பிரிவால் ருறும் டாக்டர் விசாலா அவர்கட்கும், அவரது உற் உறவினர்கட்கும், நம் ஆழ் அனுதாபத்தைத் தெரிவி துக்கொள்கிறோம்.

—ஆ

# 'இரத்தம் கொதிக்கிறது!'

— பழநி —

"தமிழ் நாட்டுக்கு அவமானம்.

தென்னகத்துக்கு அநீதி.

தென்னாட்டையே புறக்கணித்து விட்டார்கள்.

இந்த அவமதிப்பு ஆத்திரம் அடையச் செய்கிறது.

கண்களில் செவ்வரி படர்ந்தது.

மீசை படபடத்தது.

எழுதவே கை நடுங்குகிறது.

எண்ணினால் இரத்தம் கொதிக்கிறது.

நெஞ்சம் கொதிக்கிறது.

உடல் துடிதுடிக்கிறது."

நம்நாடு இதழிலோ, முரசொலியிலோ, தென்றலிலோ, அல்லது மன்றத்திலோ, போர்வாளிலோ வந்த தலையங்கத்தின் பகுதிகளல்ல இவை! இவற்றைத் தீட்டிய கரம் கழகத்தின் பணிக்குத் தம்மை அர்ப்பணித்துவிட்டவருடைய கரமுமல்ல! மாறாக தேசியம் தேசியமென்று எதையெடுத்தாலும் அந்த கண்ணோட்டத்திலேயே பார்த்துக்கொண்டு, நாட்டுப் பிரிவினை நாசம் தரும் என்று, வாய்ப்புக் கிடைத்தால் அதனைப் பயன்படுத்தியும், கிடைக்கவில்லையென்றால் உண்டாக்கிக்கொண்டும், எழுதிவருகிற கரம்! பாரதம் ஒரு நாடல்ல என்பவர்கள் மீதெல்லாம் சுடுசொற்களைப் பொறுக்கி எடுத்தோ; அல்லது அவைகூடத் தேவையில்லை என்று கருதினால் விகடமாக"வோ எழுதி வருகிற கரம்! ஆம்! ஆனந்த விகடன் இதழின் (1—9—57) தலையங்கத்தின் சில பகுதிகள் தான் மேலே கொடுக்கப்பட்டிருப்பவை!

இவ்வளவு காரசாரமாக-என்றுமில்லாத முறையில் தலையங்கம் தீட்டக்காரணம் என்ன தெரியுமா?

"1857-ம் வருஷம் சிப்பாய்க் கலகத்தில் ஆரம்பித்த சுதந்திரப் போராட்ட நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும் தருணத்தில் நமது செய்திப்பட இலாகா, 'சுதந்திர யாத்திரை' என்று ஒரு அருமையான படத்தை வெளியிட்டார்கள். அதைத் தென்னாட்டு மக்கள் பலர் ஆவலுடன் பார்த்தார்கள். ஆனால் கடைசியில் ஏமாற்றத்துடன் திரும்பினார்கள்...... அந்தப் படத்திலே தேசீய சுதந்திரத்திற்காகப் போராடிய தென்னிந்தியர்கள் யாருமே இல்லை."

பாரதம் ஒன்றல்ல, பல தேசிய இனங்களைக்கொண்ட ஒரு துணைக் கண்டம் என்று, நாம் பல ஆதா

**M.S. வெங்கடாசலம்**

ரங்களைக் காட்டிப் பேசினாலும், நம் மீது சீறி விழுந்து, பாரதம் ஒன்றல்ல எனபது பைத்தியக்காரத்தனம் என்றெல்லாம் கூறிவருகிற ஏடு, தான் கூறி வருவது உண்மை என்று மனமார நம்பினால் இப்படியா எழுதும்? சுப்பிரமணியசிவாவைப் படத்திலே காட்டினால் என்ன சி. ஆர். தாசைக் காட்டினால் என்ன — சிதம்பரனாரைக் காட்டினாலென்ன, சர்தார் படேலைக் காட்டினாலென்ன கட்டபொம்மனைக் காட்டினால் என்ன, காந்தியாரைக் காட்டினாலென்ன — வேலுத் தம்பியைக் காட்டினாலென்ன, வீரன் பகவத் சிங்கைக் காட்டினாலென்ன--திருப்பூர் குமரனைக் காட்டினாலென்ன, திலகரைக் காட்டினாலென்ன — பாரதியைக் காட்டினாலென்ன, புலாபாய் தேசாயைக் காட்டினாலென்ன—திரு, வி. க. வைக் காட்டினாலென்ன, தாதாபாய் நௌரோஜியைக் காட்டினாலென்ன—ராஜாஜியைக் காட்டினாலென்ன, ராஜேந்திரபிரசாத்தைக் காட்டினாலென்ன —என்றெல்லவா இருக்கவேண்டும்? இல்லை அவ்விதம்! மாறாக "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்று தலையங்கம் தீட்டுகிறது!

நாம் பேசுகிற மொழியும் நாம் வாழுகிற நாடும் அநீதிக்கும் அவமதிபுக்கும் ஆளாகியிருக்கிறது--என்று எண்ணும்போது, உணர்வு கொண்ட எவருக்கும் தோன்றுகிற ஆத்திரம், விகடன் ஆசிரியருக்கும் தோன்றுகிறது. இதோ அவரது தலையங்கத்தின்மற்றொரு பகுதி:-

"செக்கிழுத்த சிதம்பரனார் வருவார். தேசத்துப் போருக்குத் திருவிளக்கேற்றிய தீரர் வருவார், கப்பலோட்டிய தமிழனின் திருவுருவம் திரையில் காட்டப்படும், கரம் குவிப்போம் எனக் காத்திருந்தான் (விகடன்) ஆனால் அருமைச் சிதம்பரனார் படம் அதில் இல்லை. தமிழர் சிந்தையில் உள்ள சிதம்பரனாரை அதில் சேர்க்கவில்லை என்பதைக் கண்டதும் கரங் குவிக்க எடுத்த கைகளால் கண்ணைத் துடைத்துக்கொண்டான்".

படிக்கும்எவரையும் பதறியெழச் செய்யும்படியான இந்த சொற்கள் சாதாரணமாக எழுபவையல்ல. விகடன் கண்ணைத் துடைத்தான் என்று படிக்கும்போது நம்மையு

மறியாமல் நமக்கும் கண்களில் நீர் தேங்குகிறது! இன்னும்—படியுங்கள்:—

"இன்றைய சகாப்தத்தின் மாபெரும் கவிஞன், தேசியப் போருக்காக அஞ்ஞாத வாசம் செய்து அறநெறி வளர்த்த அமர கவிஞன், 'அச்சமில்லை, அச்சமில்லை' என்று யாருடைய பாடலைப் பாடிச் சுதந்திரப் போர் புரிந்தோமோ, 'விடுதலை, விடுதலை' என்று எந்தக் கவியினுடைய வாக்கை முழங்கி விடுதலை பெற்றோமோ, அந்த மகா கவி பாரதிக்கு அந்தப் படத்தில் இடமில்லை என்பது தமிழநாட்டுக்கு அவமானம், தென்னகத்துக்கு அநீதி, பாரதத்துக்கே ஒரு இழுக்கு என்று மனம் குமுறியது"

பாரதியார் தமிழ் இலக்கிய உலகில் பொன்னான ஓர் புதுப் பாதையை அமைத்திட்ட புரட்சிக் கவி. அவருடைய "வாழிய செந்தமிழ்" என்னும் கவிதை தான் அண்மைவரை தமிழகத்தின் தேசிய கீதமென அரசினராலேயே ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது! இருந்தும் அவருக்கு இடமில்லை அந்தப் படத்தில்!

இவ்வளவுக்கும் அவர் நாட்டைத் 'துண்டாட' வேண்டும் என்று கூறியவரல்ல! "தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள், தாயென்று கும்பிடடி பாப்பா" என்ற பாப்பா பாட்டு முதல் "வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர், வாழிய பாரத மணித் திரு நாடு" என்ற தேசியப் பண் ஈறாக 'பாரத'த்தை மறந்திடாதவர்! இருந்தும் அவருக்கு—அவரை ஈன்றெடுத்த தமிழ்த் தாய்க்கு—தாயகத்திற்கு — இந்த அளவு மதிப்புத் தரப்பட்டிருக்கிறது டில்லி மூலவரால்!

துளசிதாசர், ரவீந்திரநாத் தாகூர் இவர்களுடைய படங்களெல்லாம் தலைகளில் அச்சடித்து மத்திய அரசாங்கம் விற்றபோது நாம் கண்டித்தோம், பாரதியாரின் படம் அதிலே பொறிக்கப்படவில்லை என்பதற்காக! அப்போதெல்லாம் வாய்மூடி மௌனியாக இருந்திருக்கின்றன விகடன் போன்ற இதழ்கள்! அதற்காக அவற்றைக் குறை கூறவில்லை—மாறாக இப்போதேனும் விழிப்பு ஏற்பட்டதே என்று உளமார வாழ்த்துகிறோம்!

நேற்று வரை வடக்காவது தெற்காவது என்று எழுதிவந்த இதழ், இன்று வடநாடு தென்னாடு என்று பிரித்து எழுதுவதோடு மட்டுமன்றி, அறிந்தோ, அல்லது மறந்தோ நாம் கூறிவருகிற திராவிட நாட்டின் எல்லையை வரையறுத்துக் கூறியிருக்கிறது. அது கூறும் தென்னாடு என்பது திராவிடம் தவிர வேறல்ல! இதோ காணுங்கள்:—

"நான் பிறந்த நாட்டடை மறந்துவிட்டார்கள். நான் வணங்கும் தலைவர்களை மறந்துவிட்டார்கள். தென்னாட்டையே புறக்கணித்து விட்டார்கள். **கன்னித் தமிழையும், கனி தெலுங்கையும், கட்டிக் கரும்புபோன்ற கன்னடத்தையும்' கவினுறு மலையாளத்தையும் மறந்துவிட்டார்கள்.** மகாராஷ்டிரத்திற்குத் தெற்கே மனிதர்களே இல்லை என்று எண்ணிவிட்டார்கள்"

தமிழும் தெலுங்கும், கன்னடமும் மலையாளமும் பேசிவரும் மக்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்று ஆனந்தவிகடன் சொல்லுவதற்கும், திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது என்று நாம் கூறுவதற்கும் என்ன வேறுபாடு, பொருளில்?

"நான் வணங்கும் தலைவர்களை மறந்துவிட்டார்கள்" என்ற வாக்கியத்தின் பொருளென்ன? வடநாட்டுத் தலைவர்கள் இவரால் வணங்கப்படும் தலைவர்களல்லவா? வணங்கப்படும் தலைவர்கள் தான்—தலையங்கத்தின் பல இடங்களில் "அஞ்சலி செலுத்தினேன" "கரம் குவித்தேன" எனறெல்லாம் கூட எழுதப்பட்டிருக்கிறது. ஆனால் தென்னாட்டுத் தலைவர்களை நினைத்திடும்போது ஏற்படுகின்ற பாசமும் பந்தமும் வடநாட்டுத் தலைவர்களை நினைக்கும்போது ஏற்படவில்லை—ஏற்படுவதில்லை—ஏற்படவும் இயலாது என்பது தவிர வேறென்ன இதற்குப் பொருள்?

இந்த உணர்ச்சி ஆனந்தவிகடனுக்கு ஏற்படுகிறது! இரத்தம் கொதிக்கிறது, என்கிறது!!

"மகாராஷ்டிரத்திற்குத் தெற்கே மனிதர்களே இல்லை என்று எண்ணிவிட்டார்கள்"! — கூறுகிறது விகடன். மொழியானாலும் சரி, கலையானாலும் சரி—முன்னேற்றத் திட்டமானாலும் சரி, பண்பாட்டை எடுத்தோதும் பற்பல முயற்சிகளானாலும் சரி—எதிலும் திராவிடம் புறக்கணிக்கப்படுகிறது! மதிக்கப்படுவதில்லை— என்கிறோம் நாம். ஆனால் ஆனந்தவிகடன், அதைவிட ஒரு படி மேலே போய் திராவிட இனம் மனித இனமாகவே மதிக்கப்படுவதில்லை என்று கூறி—நாம் கூறிவருகின்ற குற்றச்சாட்டுக்கு ஆதாரத்தையும், அதுபோன்ற குற்றங்கள் நிகழ்வதற்கான காரணத்தையும் எடுத்துக் காட்டுகிறது!

இவ்வளவு விளக்கமாக—வேதனையோடு — வெட்கம் பீறிட்டு வரும் நிலையில் — கண்ணீரைத் துடைத்துக்கொண்டு —இன்னும் சொன்னால் குருதியில் எழுதுகோலைத் துவைத்து—தென்னாடு புறக்கணிக்கப்பட்டிருக்கிறதென்று எழுதுகிறது!!

நல்லவேளையாக இதழுக்கு பதில் தரவேண்டிய பொறுப்பை

## முரசு

"தமிழின் பழம் பெருமையையும், அதன் வளத்தையும் வடநாட்டார் குறை கூறும் நிலை இப்பொழுது அங்கு ஏற்பட்டுள்ளது. தேவையான கலைச்சொற்கள் இந்தியில் இல்லாதிருந்தும், தமிழிலிருந்து அத்தகைய சொற்களை எடுத்துக்கொள்ள வடநாட்டினர் விரும்பவில்லை.

அரசியல் சட்டத்தை இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கும் பொருட்டு டில்லியில் கூட்டப்பட்ட "மாநாடு ஒன்றில் தமிழ் மொழியின் சார்பில் நான் கலந்துகொண்டேன்; அப்பொழுது இந்த நிலை அங்கு நிலவியதை நான் உணர்ந்தேன்.

முதிர்ச்சியடையாத இந்தி மொழியைத் தென்னகத்தின்மீது திணிக்க முயல்வதைத் தமிழர்கள் வன்மையாக எதிர்க்கவேண்டும். எதிர்ப்பதற்கு இதுவே தருணமாகும்"

என்று சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் டாக்டர் ரா.பி. சேது (பிள்ளை) அவர்கள், கோவை நன்னெறிக் கழகச் சார்பில் பொன்னாடை போர்த்தப்பட்டபோது உணர்ச்சியோடு அறிவித்துள்ளார்.

நமக்கு விட்டுவைக்காமல், தன்னையறியாமல், தானே மேற்கொண்டிருக்கிறது **கல்கி**. இதோ படியுங்கள் அந்த இதழில் (1—9—57) எழுதப்பட்டிருப்பதை :—

"பாரத சர்க்கார் இப்படித் தென்னாட்டு மக்களின் உள்ளங்களை நோகும்படி காரியம் செய்து கொண்டே போனால் முடிவில், எதில் கொண்டு போய்விடும் என்று நாம் சொல்லத் தயாராயில்லை. இதனால் கஷ்டமும் நஷ்டமும் அடையப் போவது பாரத சர்க்காரே ஒழியத் தென்னாட்டவர்கள் அல்ல !''

எத்தனை யெத்தனை உட்பொருள்கள் இதில்! இந்த நிலை மேலும் நீடித்தால் தென்னாடு பிரியும்—அது பாரதத்துக்கு நஷ்டம், தென்னாட்டுக்கு இலாபம்—என்பவை இந்த வாக்கியங்களிலே மறைமுகமாகக் கூறப்படும் உண்மைகள் !

ஒரு நாட்டு விடுதலைப் போராட்டத்திற்கு அந்த நாட்டு வரலாறு ஊன்றுகோல்—உயிரூட்டும் சாதனம்! எனவே அதனையே அழித்து விட்டால், இருட்டடிப்பு செய்து விட்டால் விடுதலை இயக்கம் நசித்துவிடும்—நாட்டுப் பிரிவினையால் நமக்கேற்படவிருக்கும் நஷ்டத்தைத் தவிர்த்திடலாம் — என்று பாரத அரசாங்கம் திட்டமிட்டுச் செய்கிறது என்ற பொருள் பொதிந்து கல்கி தீட்டுகிறது.

இதோ கல்கி தலையங்கத்தின் மற்றொரு பகுதி :—

"பாரத சர்க்கார் அடிக்கடி இமய முதல் குமரிவரை ஒன்றென்று கூறிவருகிறார்கள். நாம் எல்லோரும் இந்தியர்கள் என்கிறார்கள்.''

நாமெல்லாம் ஒரே தேசம் என்று கூறுவது டில்லி ஆட்சி பீடத்தில் இருப்பவர்கள், நாமல்ல என்கிறது அந்த ஏடு! அப்படிப் பாசம் காட்டப்படுவதற்கான காரணம் இலாப நோக்கமே தவிர வேறல்ல என்றும் மறைமுகமாகச் சுட்டிக் காட்டுகிறது. அத்தகைய இலாப நோக்கம் படைத்தவர்கள் விடுதலை வேட்கையை நசுக்கிவிடுவதற்காகவே திராவிடத்தின் வரலாற்றினை இருட்டடிப்பு செய்கிறார்கள்—இது வேண்டுமென்றே செய்யப்படுகின்ற காரியம்—என்று பொருள் கொள்ளாமல் எப்படிக் கொள்ளமுடியும் நம்மால் ?

நாம் இதுவரை சொல்லிவந்திருக்கிறோமல்லவா, வடநாடு ஆள்கிறது தென்னாடு ஆளப்படுகிறது—வடநாட்டிலிருப்பது தலைவர்கள், தென்னாட்டில் இருப்பது தொண்டர்கள்—என்று! அந்தக் கருத்தினை நிரூபித்திருக்கிறார்கள் இன்று! எப்படி? தென்னாட்டுத் தலைவர்கள் பெயரும் பாரதத்தின் வரலாற்றில், பாரத அரசாங்கத்தின் செய்திப் படங்களில் பொறிக்கப்படவில்லை! முதல் முழக்கம் செய்த கட்டபொம்மனோ, செக்கிழுத்த சிதம்பரமோ, சுதந்திர கீதம் பாடிய பாரதியோ, ஏன், இன்றும் வாழ்கிற காமராசரும் ராஜாஜியும்கூட நமக்குத் தலைவர்களாக இருக்கலாம் — ஆனால் அவர்களுக்குத் தொண்டர்கள்!

ஒரு வீட்டில் விருந்தோ அல்லது வேறு ஏதாவதொரு விழாவோ நடக்கும்போது, உற்றார் உறவினர்களை அழைத்து, ஆடையும் அணிமணிகளும், அறுசுவை உண்டியும் தருவார்களே தவிர வேலையாட்கள் அவ்வளவிலும் பங்கு பெறவா முடியும்? வேண்டியவர்கள் உண்டு ஆன பிறகு, மீதம் ஏதாவது இருப்பின், அதையும் அரைமனதோடு அவர்களுக்குத் தருகின்ற பண்பு படைத்த எஜமானர்கள் தான் ஏராளம்!

அந்த வேலைக்காரர் நிலைக்கும், இன்றைய திராவிடத்தின் நிலைக்கும் என்ன வேறுபாடு? திராவிடம் இன்னும் முழு விடுதலை பெறவில்லை — வெள்ளையன் கரத்திலிருந்த அதிகாரம், வடநாட்டின் கரத்திற்கு மாறியிருக்கிறதே தவிர, வேறெந்த மாற்றமும் திராவிடத்திற்கு ஏற்படவில்லை—என்பதற்கு இதைவிட வேறென்ன ஆதாரம் வேண்டும்? இதனை, இதுவரை புரிந்துகொண்டிராவிட்டால் புரிந்துகொண்டு, முன்பே தெரிந்திருந்தால் தெரிந்ததைத் திட்டவட்டமாக. ஒளிவு மறைவு இல்லாமல், மக்களுக்கு எடுத்தியம்புவது நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும், இனப்பற்றும் கொண்டோர் ஆற்றிட வேண்டிய அரும்பணி! ஆற்றிட முன்வருமா ஆனந்தவிகடனும், கல்கியும்? அல்லது இரத்தம் கொதிக்கிறது — என்று தீட்டுவதோடு நின்றுவிடுமா!!

★

# ஐயகோ!

தேசியக் கவி பாரதியாருக்கு இந்த கிழமை விழாக் கொண்டாடுகிறார்கள்! 'ஜன சக்தி' முதலான ஏடுகள், அவர் புகழ் பாடுகின்றன !!

இதே சமயத்தில் டில்லி, என்ன வழங்குகிறது தெரியுமா? —பாரதியாரின் திருப்படத்தினை தபால் தலைகளில் அச்சிட இயலாதென அறிவிக்கிறது !!

நாராயணசாமி என்பார் டில்லி பார்லிமெண்டில் விடுத்த கேள்வியொன்றுக்கே, டில்லி, இவ்விதம் பதில் வழங்கியுள்ளது.

பாரதியாருக்கு இடமில்லையாம்!

பத்மினி அறிவிக்கிறார் — தன் படத்தை ரஷ்ய நாட்டுக் கவர்களில் போட்டதாக. திரைப்பட நடிகை பத்மினிதான் சொல்வது! நடிகைக்கு ரஷ்யா அளிக்கும் மதிப்பு அது. சமூகத்தையே சண்டமாருதமாக்கிய எழுச்சிக் கவிஞருக்கு, இடம் கிடையாது இங்கே !!

தபால் தலைகளில் போடுவதன் மூலம், மகத்தான காரியம் செய்யப் போவதில்லை, டில்லி. ஆனால், மறைந்த கவிஞருக்கு மரியாதை காட்டும் செயலெனக் கருதி, தமிழ் நாடு, வேண்டுகிறது! கேள்வி விடுத்தவரும் காங்கிரஸ்காரர்தான், எனினும் தட்டிச் சொல்லுகிறது, டில்லி, முடியாதென்று !!

சிறுகதை

# தம்புரா இசை

பி. சி. கணேசன்

வானம் கறுத்து மழைக்கு முன்னேட்டம் காட்டியது. கரிய வானத்தில் நெருப்புக் கீறல்கள் போட்டுக்கொண்டிருந்தது மின்னல். தூரத்தில் 'ஞெய்ங்.........ஞெய்ங்' என்ற பேரிரைச்சலோடு காற்று அந்தரத் தாண்டவம் ஆடிக்கொண்டிருந்தது. ஊழிக்காலம் நெருங்கிவிட்டதைப்போல ஒரு பிரமை.....

என் அறையின் சன்னல் கதவுகள் 'படீர் படீர்' என்று அடித்து அபசுரம் எழுப்பின. சேர்த்து வைக்கப்படாத காகிதங்கள் சிதறிப்பறந்தன. எங்கோ ஒரு கன்று அன்னையின் ஆதரவு தேடி 'அம்ம்மாவ்வ்' என்று ஆரோகணம் இசைத்தது. மண்ணின் வாடையைத் தாங்கி இதமான குளிர் காற்று உடலைத் தழுவிச் சாந்தி செய்தது.........

காற்றடிக்குது, கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே!

தூற்றல், கதவு சாளர மெல்லாம்
தொளைத்தடிக்குது, பள்ளியிலே

இசை, தாள லயத்தோடு பாரதியின் பாட்டு என் உள்ளத்தில் கிளர்ந்தெழுந்தது. வாய்விட்டுப் பாடினேன்; ரசிப்பாரோ கேட்பாரோ இன்றிப் பேய்ச்சூறையிலே என் பாட்டும் கலந்து மறைந்தது.

என் மனம் படபடத்தது. இயற்கை அன்னையின் கோபச் சிரிப்பில் என் தனிமை என்னைப் பயமுறுத்தியது. காரிருளும், தனி வழியும், மயானக் கற்பனைகளும் கூட என்னைப் பயமுறுத்தியதில்லை. ஆனால் இன்று.....குமுறியடிக்கும் மழைக்காற்று ....அதன் கூட்டாளியான மையிருட்டு, நான் இருக்கும் அறையின் தனிமை, ஜனசந்தடியற்ற அந்தக் கிராமத்தின் ஒதுப்புறம் — உள்ளத்தை என்னவோ செய்தது. உள்ளமாகிய கப்பல் அலைக்கழியும்போது பேச்சுத்துணை ஒரு நங்கூரம். நானோ, இந்த வேளையில் நங்கூரம் பாய்ச்சாத நாவாய்.........

கவிதையும் கற்பனையும்கூட சாந்தியளிக்காத சமயங்கள் உண்டு .........மனக்குரங்கு சிந்தனையால் கட்டுப்படாமல் தாவித்திரியும் போக்கு......... ஆர்ப்பரிக்கும் இயற்கைகூடச் சிறிது நேரத்தில் அமைதி பெற்று விடும்............ வானம் பொத்துக்கொண்டு மழை கொட்டும்......ஆனால் நான்—என்னுடைய மனம்!

உலகமே இருண்டு கிடக்கும் போது என் உள்ளத்தில் மட்டும் அந்த உயிரொளி அணையவில்லையே....,கற்பகம்! என் உயிரோடு உயிராய் ஒன்றிக் கலந்திருந்தவள், இப்பொழுது எங்கோ, யாருடனே .........அந்த நினைவே என்னைக் கொல்லுகிறது!

சிட்டின் இறகுபோல் படபடக்கும் இமைகள்......... இமைத்து இமைத்துப் பார்த்து என்னை இன்பக்கேணியில் தள்ளியவள்.... அவள் ஊரிலேகூட இப்பொழுது மழைபெய்யலாம்...... காற்றடிக்கலாம்! இடி இடித்தால் அவளுக்கு எத்துணை பயம்.....ஒருமுறை கல்லூரியில் நாங்கள் 'பிக்னிக்' சென்றிருந்தபோது...... இப்படித்தான் மழை பெய்தது; இடித்தது! அவள் உடல் வெடவெடவென்று ஆடியது. அவள் சிநேகிதிகளும் மாணவர்களும் கேலி செய்ய.........நான் பரிந்து பேச...இருவருமே கேலிப் பொருளானோம்!

இப்பொழுது அவள்கூட அதைப்பற்றித்தான் எண்ணிக் கொண்டு படுத்திருக்கிறாளோ என்னவோ.........ஆனால் எங்கே, எவருடைய அணைப்பில்......என் தலை சுக்கு நூறாக வெடித்துவிடும் போல் இருந்தது. ஆம், கற்பகம் என்னைப் பொறுத்தவரையில் வெறும் கனவு! கட்டாயம் கலைய வேண்டிய கனவு!

அவள்வேறொருவனுக்குச்சொந்தம். உடலால் அப்படித்தான், பெண்கள் மனம்தான் பச்சோந்தி போல் மாறும் தன்மை உடையதாயிற்றே! நான் இல்லாவிட்டால் அவளுக்கென்ன? யாருடனே வாழ்க்கை நடத்துகிறாள். ஆனால் நான் மட்டும்.........? அவளையே எண்ணி எண்ணி என் உள்ளம் நெக்குருகுகிறது. இனி அவளை நினைக்க எனக்கு என்ன உரிமை இருக்கிறது? அறிவு அப்படித்தான் சொல்லுகிறது. ஆனால் மனம்? ஆமாம், அறிவும் மனமும் ஒத்து இயங்கிவிட்டால் வாழ்க்கையில் சுவையேது? சுறுசுறுப்பேது!

*

'டொய்ங்.........டொய்ங்'

எங்கிருந்தோ கிளம்பிய தம்புரா இசை என் சிந்தனையைக் கலைத்தது. மழை பயமுறுத்தும் இந்த அகால வேளையில் சுருதிகூட்டும் அந்த இசைக் கலைஞன் யார்? கதவைத் திறந்து வெளியே எட்டிப்பார்த்தேன். நிழலோடு நிழலாய் ஒரு பெண்ணுருவம் தம்புராவை வைத்து மீட்டிக்கொண்டிருந்தது. சீறியடிக்கும் காற்று சிறு சிறு நீர்த்திவலைகளையும் வாரி யிறைத்துக்கொண்டிருந்தது.

இசையில் சுருதி சேரவில்லை; விரல்கள் மட்டும கம்பியைத்தட்டி ஓசை எழுப்பிக்கொண்டிருந்தது.

அபசுரம்! சுருதிபேதம்!

"யார் நீ?" — தேவையில்லாத கேள்வி. ஏன் கேட்டேன்; எனக்கே தெரியாது.

அவள் பதில் பேசாமல் வாயிற்படி அருகில் வந்தாள். விளக்கொளி அவள் முகத்தில் விழுந்தது. மாசுமருவற்ற முகம்; அதில் பளபளக்கும் இரண்டு விழிகள். எங்கோ பார்த்த முகம்; இல்லை அறிமுகமான முகம்!

என்ன? கற்பகத்தின் முகச் சாயல்.........ஒரு வேளை......ஏன் இருக்காது.

"உன் பெயர்.........?"

"கருப்பி.........

முட்டாள் பெற்றோர். ஒருவேளை குருடர்களாக இருந்திருக்கவேண்டும். 'சிகப்பி' நல்ல காரணப் பெயராக இருந்திருக்குமே; பொருத்தமில்லாமல் பெயர் வைப்பது தானே மரபாகி வருகிறது. அது போகட்டும், கற்பகத்துக்கும் இவளுக்கும்தான் உருவ அமைப்பில் எவ்வளவு ஒற்றுமை! ஆனால் இவள் நிச்சயம் கற்பகமல்ல; என்னைப் பார்த்தவுடன் முகத்தில் சலனமே தோன்றவில்லையே!

எனக்கு ஏன் இவளிடத்தில் அனுதாபம்; ஏழை என்பதாலா? எத்தனை ஏழைகளை இரக்கமின்றி வாயிற்படியிலிருந்து விரட்டி அடித்திருக்கினறேன். விஷயம் புரியாமலில்லை. கற்பகத்தின் சாயல் இவளிடம் இருப்பதுதான் என் கனிவுக்குக் காரணமோ!

திடீரென்று மழை கொட்ட ஆரம்பித்தது! 'சோ' என்று பேரிரைச்சல்!

"ஐயா, ஏதாச்சும் தர்மம் செய்யுங்க ஐயா!"

தம்புரா இசை நின்றது. அவள் வந்த காரியத்தைச் சொன்னாள்.

"அவசரப்படாதேம்மா; ஒரு பாட்டுப் பாடு, காசு தர்ரேன்!"

ரசிக உணர்ச்சியா, விரச உணர்ச்சியா? உள்ளுணர்வு கேட்டது. மனம் காதைச் செவிடாக்கிக் கொண்டது.

அவள் தம்புராவை மீட்டி, கட்டளையை நிறைவேற்றத் தொடங்கினாள். இசையைக் காதுகள் கேட்கவில்லை; கண்கள் பார்த்தன!

"றொய்ங்.......றொய்ங்" — பேய்காற்று வீசி, மழையை மறியல் செய்தது. காற்றில் வாசற்கதவு 'படார்' என்று சாத்திக்கொண்டது; 'பளிச்'சென்று மின்னல்; விளக்குகள் அணைந்தன.

......தம்புரா இசைக்கவில்லை. அவளே யாழானாள்; என் உடல் முழுவதும் இன்ப உணர்வு பரவியது. 'கற்பகம், கற்பகம்!' என் வாய் மழலை பேசியது. மனச்சூன்யம் நிரம்பிவிட்டது.

*

காலையில் கண்விழித்த பொழுது அவள் இல்லை; நல்லவேளை—நான்தான் அவள் முகத்தில் எப்படி விழிப்பது? இரவு, ஒருவேளை கனவுதான் கண்டேனோ! நொருங்கிக்கிடந்த வளையல்கள் வேறுவிதமாகச் சாட்சியம் கூறின.

சன்னல் வழியாக எட்டிப் பார்த்தேன். தெருவின் அசுத்தங்களையெல்லாம் மழை நீர் சுத்தமாக அடித்துச் சென்றிருந்தது.

பல் குச்சியை வாயில் வைத்துக் கடித்தபடியே குளத்தங்கரை நோக்கிப் புறப்பட்டேன். குளக்கரைப் பாழ் மண்டபத்தருகே பெரும் கூட்டம். கூட்டத்தை விலக்கிக்கொண்டு பரபரப்போடு உள்ளே போனேன்.

கிழவன் ஒருவனுடைய பிணத்தின்மீது கருப்பி விழுந்து அழுது கொண்டிருந்தாள். அவளைப் பார்க்க எனக்கு மனத்திராணியில்லை. அங்கிருந்து நகரவும் கால்கள் மறுத்தன.

"யார் இந்தக் கிழவன்?"

என் குரலைக் கேட்டவுடன் அழுகையை நிறுத்தி விட்டுத் தலைநிமிர்ந்து பார்த்தாள். என்னைப் பார்த்தவுடன் முகத்தைக் கைகளால் மூடிக்கொண்டு 'கோ'வென்று அழுதாள்.

"செத்துப்போனது யார்?"

"அவர்தானய்யா என் புருசன்; ......நான இரவு வந்து பார்க்கும்போது பிணமாயிட்டார்"—அவள் செருமிச் செருமி அழுதாள்.

இந்தக் கிழவன் கருப்பியின் கணவனா? அட பாவமே! அவளுக்குத்தான் அவனிடத்தில் எவ்வளவு வாஞ்சை?—ஆனால் நேற்று இரவு......

நான் கொடுத்த ரொட்டித் துண்டுகளும் சில்லறையும் தம்புராவின் அருகில் அப்படியே இறைந்து கிடந்தன. என் கற்பகம் எனக்கு எட்டாக் கனியானது போலவே, கருப்பியின் கணவனும் இனி அவளுக்குக் கிட்டாத பொருள்......இந்தக் கிழவனிடம் அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? ஏன் தேம்புகிறாள்...?

என்னைப்பற்றி அவள் என்ன நினைக்கிறாளோ...நான் நகர்ந்தேன் ரொட்டித் துண்டுகளும் சில்லறையும் என் மீது வந்து விழுந்தன. நான் திரும்பிப் பார்த்தேன், அவள் என்னைப் பார்த்துக் காறி உமிழ்ந்தாள். அவள் வாய் திறக்குமுன் வேகமாக நடையைக் கட்டினேன்.

சில தினங்களுக்குப் பிறகு ஒரு நாள்; கருப்பி ஒரு இளம் வாலிபனோடு தம்புரா இசைத்துக் கொண்டு செல்வதை நான் பார்த்தேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா?

இசைக்கத்தானே தம்புரா? சுருதி கெட்டால் பெரிய நஷ்டமில்லை! கலைஞர்களுக்கு அது குற்றம். ஆனால் வாழ்க்கையில் தோல்வி கண்ட என் போன்றவர்களுக்கும், வாழ முடியாத கருப்பி போன்றவர்களுக்கும் அதுதானே வாழ்க்கை வேதாந்தம்?

★

விரைவில் ஆரம்பமாகும்

தோழர் இராதாமணாளன் தீட்டிய

'பாண்டியன் திருமேனி'

உள்ளம் தொடும் தொடர் கதை!

# உருவாகும் வரலாறு

**1—9—57 இதழின் தொடர்ச்சி**

ஒரு மிராசுதாரனுடைய வேலைக்காரனுக்கு பெருமாள் என்ற பெயர் இருந்ததாம், அந்த மிராசுதாரன் அவனைப்பெருமாள் என்று அடிக்கடி கூப்பிடுவது ஆண்டவனுக்கு அடுக்காது என்று எண்ணி அவன் பெயரை மாற்றிக் கொள்ளச் சொன்னான். அந்த தந்திரக்காரன் சொன்னானாம் 50-ரூபாய் பிடிக்கும் என்று; ஆண்டை 50-ரூபாய் கொடுத்தான். அதை வாங்கிக்கொண்டு போய் செலவழிக்க வேண்டிய முறைப்படி செலவு செய்துவிட்டு 10-நாட்களுக்கு பின் திரும்பி வந்தானாம்! பெயரை மாற்றிக் கொண்டாயா ?...மாற்றிக் கொண்டேன்.....இப்போது பெயர் பெருமாள் அல்லவே...இல்லை... என்ன பெயர்...பெரிய பெருமாள் என்றானாம். அதுபோல், திராவிட நாட்டுப் பிரிவினையையா ஒத்தி வைக்கச் சொன்னாய் என்று கேட்டால், இல்லை இல்லை நாசவேலையை ஒரு பத்து வருடத்திற்கு ஒத்தி வைக்க சொன்னேன் என்று ஒரு மந்திரி சொல்லுகின்றார். நாசவேலையை விட்டுவிடச் சொல்லுவார்கள், ஒத்தி வைக்கவா சொல்லுவது. அவருடைய வாசகத்தின்படி தி. மு. க. நாசவேலை செய்வது என்றால் அதற்கு லைசன்ஸ் கொடுக்கிறார் என்று பொருள். இதனை ஒப்புக் கொள்ளுகின்றாரா அமைச்சர்?

நீங்கள் இப்போது எண்ணிப் பார்க்கவேண்டும் பாராளுமன்ற முறைப்படி பேசுவது இதுதானா என்பதை. நிதி அமைச்சர் சுப்பிரமணியம் அவர்கள் ஆவலோடு இன்றையத் தினம் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கின்றார் இக்கட்டான நிலை ஏற்பட்டதை— தி. மு. க. வினர் 15 பேர் சட்ட மன்றத்தில் அமர ஆரம்பித்ததால். ஆகையினாலே நீங்கள் எங்களிடத்திலே எந்த நம்பிக்கையை வைத்து எந்தப் பொறுப்பைத் தந்திருக்கின்றீர்களோ அந்தப் பொறுப்பை நிறைவேற்றுகின்ற தன்மையில் இங்கேயும் செய்திருக்கின்றோம். வடக்கே டில்லியில் நம்முடைய சம்பத் இதுவரையிலே பேசுவதற்கான வாய்ப்புப்பெறாமல் இருந்தது உங்களுக்குத் தெரியும். பேசுவதற்கான வாய்ப்பை அவர் பெறாததற்கான காரணங்கள் உங்களுக்குத் தெரிந்திருக்காது. அந்தக்காரணங்கள் எனக்குத் தெரியும்; அந்தக் காரணங்கள் தெரிந்த பிறகு ஒரு தடவை லோக் சபாவின் தலைவர் அனந்தசயனய்யங்கார் அவர்கள் இங்கே வந்திருந்தார். சட்டசபை உறுப்பினர்கள் சேர்ந்து நடத்திய ஒரு விருந்தில் நானும் கலந்து கொண்டேன். அவரிடத்தில் என்னைக் கொண்டுபோய் அறிமுகப் படுத்தினார்கள். அவரிடத்தில் நானும் கொஞ்ச நேரம் பேசினேன். நண்பர்கள் சிலபேர் என்னையும், என்னுடைய தம்பி சம்பத் என்பதையும், சம்பத் அங்கே இதுவரை பேசுவதற்கு வாய்ப்புக்கிடைக்காமல் இருப்பதையும் அனந்தசயன அய்யங்காருக்கு கவனப்படுத்தியிருக்கின்றார்கள். இந்தத் தடவை அனந்தசயனய்யங்காரோ அல்லது அவர் இல்லாதபோது சபா நாயகராக அமர்ந்த உக்கும்சிங் அவர்களோ சம்பத் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்திருக்கின்றார்கள் என்று பத்திரிக்கையில் பார்த்தேன்.

பாராளுமன்றம் ஏற்பட்டு வருஷம் பத்து ஆகின்றது. பண்டித நேரு ஈடு எதிர்ப்பு இல்லாமல், தன்னுடைய காதுக்குக் கசப்பான வார்த்தைகள் பேசுகின்றவர்கள் உட்கார்ந்திருக்கின்ற 500 பேரிலே எந்தப்பக்கத்திலுமில்லாமல், யாராவது சில பேர், தனக்குப் பிடிக்காத விஷயம் பேசுகின்றார்களா என்று பார்த்தால், ஏன் பொதுவுடைமைசீக்கிரமாகக்கொண்டுவரவில்லை என்று கேட்கின்ற கம்யூனிஸ்டுகளும் எனக்குத் தெரியும்; எப்போது கொண்டுவர என்று அதட்டுகின்ற நேருவும் தெரியும். இப்படிப்பட்ட முறையில் இருந்து வந்த அந்தப் பாராளுமன்றத்தில் சென்ற வாரத்தில் சம்பத் எழுந்திருந்து India is not a multi-lingual state; but it is a multi-national continent. இந்தியா என்பது பல மொழிகளைக் கொண்ட ஒரு கூட்டு ராஜ்ஜியமல்ல; பல மொழிகளைக் கொண்ட ஒரு தொகுப்பு. என்ற வாசகத்தைச் சொன்னதை பாராளுமன்றம் இன்றையத்தினம் கேட்டிருக்கின்றது. இதற்கு நாம் கொடுத்த விலை அதிகமல்ல. இதற்காக நாம் பட்ட கஷ்டம் வீண் போகவில்லை. பாராளுமன்றத்தில் 500-க்கு மேற்பட்ட காங்கிரஸ் உறுப்பினர்கள் உட்கார்ந்து கொண்டிருக்கின்ற நேரத்தில் (India is one and indivisible) இந்தியா என்பது ஒரு நாடு; பிரிக்கப்பட முடியாதது என்பதைத் தத்துவமாக வைத்துக்கொண்டிருக்கின்ற நேரத்தில்; அவர்களுடைய மன்றத்திலேயே நம்முடைய பிரதிநிதி, நம்முடைய உறுப்பினர் எழுந்திருந்து இந்தியா என்பது பல நாடுகள் கொண்ட

# பேசப் பழகிக் கொள்கிறார்கள்

தொகுப்பு என்பதை எடுத்துச் சொன்னார் என்றால், இதனைத் தான் சத்தியமூர்த்தி அந்த நாட்களில் சொன்னார். சிங்கத்தின் குகைக்குள்ளேயே புகுந்து அதன் பிடரியைப் பிடித்து ஆட்டுவது என்று.

எதற்காகப் போனார்கள் எதற்காக போனார்கள் என்று பெரியார் இராமசாமி கேட்கின்றாரே! என்னைச் சந்தேகப்படு பரவாயில்லை. நான் ஊர்ப் பிள்ளை; உன்னுடைய சொந்தப் பிள்ளையைப் பார். நீயும் திராவிட நாட்டுப் பிரிவினைக்கு தமிழ் நாட்டில் எத்தனையோ பேரை உண்டாக்கி இருக்கின்றாய்; இதுவரையில் டில்லி பாராளுமன்றத்திற்குச் சென்று திராவிட நாடு என்று பேசவில்லை. நீ கொடுத்த பாடம், நீ ஊட்டிய ஊட்டம், நீ கூறிய அறிவுரை, இவைகளைப் பெற்ற உன்னுடைய குலக்கொழுந்து, உன்னுடைய உண்மையான வாரிசு, உன்னாலே உதறித் தள்ளப்பட்ட வாரிசு, என்னாலே தம்பியாக ஏற்றுக்கொள்ளப்பட்டவன் டில்லிக்குச் சென்று இந்தியா என்பது ஒரு நாடு அல்ல, பலநாடு என்று பேசியதைக் கேட்பதற்குத் தான் முடியவில்லை என்றாலும், படிப்பதற்குப் பெரியாராலே முடியுமே! படிக்கின்ற நேரத்தில் நீங்கள் பக்கத்திலே இருந்திருக்க மாட்டீர்கள்! என்னாலே, ஊகித்துக் கொள்ளமுடிகின்றது, அவருடைய புன்னகை தாடியையே ஒளிபெறச் செய்திருக்கும்.

"பரவாயில்லை, நம்முடைய மகன் திராவிட நாடு என்று அங்கே சென்று பேசச் செய்திருக்கின்றது என்று சொல்லிவிட்டு, எங்கே அந்தச் சந்தோஷத்தைத் திராவிட கழகத்தார் பார்த்துவிட்டால் தன்னைச் சந்தேகிக்கின்றார்களோ என்றபயத்தில், பத்திரிகையாலே முகத்தை மூடிக் கொள்ளுகின்றாரே தவிர; வேறு ஒன்றும் அவருக்கு அதிலே பெருமையில்லை என்று அர்த்தமல்ல.

திராவிடர் கழகத்தை நம்பிக் கொண்டிருக்கின்ற தோழர்களே இந்தத் துறையில் பெரியார் உங்களை நிச்சயமாக ஏமாற்றுகின்றார்; நீங்கள் ஏமாந்துக்கொண்டு வருகின்றீர்கள்.

அவருக்குத் தெரியும் சட்டசபையில் நாங்கள் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியும் டில்லியில் சம்பத்தும், தருமலிங்கமும் எடுத்துக் கொள்ளுகின்ற முயற்சியும்; தி. க. வேறு தி. மு. க. வேறு என்று எவ்வளவுதான் பிரித்துப் பிரித்துக் காட்டினாலும் இவர்கள் எல்லாம் பெரியாருடைய ஆட்கள் என்று வடக்கேயும் இங்கேயும் பேசுவார்கள் என்று பெரியாருக்குத் தெரியும்; தெரிகின்ற நேரத்தில் எந்தக் காரியத்தை எந்தப் பிள்ளைகள் செய்ய வேண்டுமோ அந்தப் பிள்ளைகள் செய்கின்றது; இந்தப் பிள்ளைகள் என்னோடு சும்மா வரவேண்டிய பிள்ளைகள் என்று உங்களை அழைத்துக் கொண்டு போகின்றாரே தவிர உங்களைப் பரிபூர்ணமாக நம்பவில்லை. வேண்டுமென்றால் பாருங்கள், உங்களிடத்தில் எந்தக் காரியத்தை ஒப்படைத்திருக்கின்றார் என்று எப்போதாவது எதன் பேரிலாவது அவருக்குக் கோபம் வந்தால் அதை உங்களிடத்தில் கொடுத்து கொளுத்து என்கிறார். ஏன்? உங்களால் அவ்வளவுதான் முடியும் என்று அவர் தீர்மானித்திருக்கின்றார். வேறு ஒன்றுமில்லை. நான் இதைப் பணிவன்புடன் சொல்லிக்கொள்ளுகின்றேன்—கேலிக்கல்ல. பெரியார் எந்தவிதத்தில் இன்றைய திராவிடர் கழகத் தோழர்களை ஏமாற்றப் பிரியப்படுகின்றார் என்பதைச் சொல்லப் பிரியப்படுகின்றேன். ஏமாற்றுகின்றார் என்றால் குற்றச்சாட்டிற்கு சொல்லவில்லை. பெரியவர்கள் அப்படியெல்லாம் ஏமாற்றுவார்கள், சின்னக்குழந்தை அதிகமான வாழைப்பழம் தின்றுவிடும் என்று பயந்தால் தாத்தா என்ன செய்கின்றார். இந்தக் கையில் இருக்கின்ற வாழைப் பழத்தை அந்தக் கையில் மறைத்து, பின்னாலே தள்ளி வாழைப் பழம் இல்லை என்று சொல்லவில்லையா? அதைப்போல பெரியார் காட்டவில்லையா? முன்னாலே காந்தி நல்லவர் என்று சொல்லி, இப்போது நாலலவர் இல்லை பார், ஆஹா நல்லவர் இல்லை, நல்லவர் இல்லை என்று நீங்கள் ஏமாந்தால் அதற்கு நான் என்ன செய்ய?

ஆகையினாலே டில்லிக்குச் சென்றதாலேயோ சென்னை சட்டசபைக்குச் சென்றதாலேயோ தி. மு. க., தி. க. - விலிருந்து பெற்றுக்கொண்டுவந்த அந்த நல்ல உணர்ச்சியை நிறைவேற்றி வைக்கின்றதே தவிர, ஒருவகையிலும் துரோகம் செய்யவில்லை, ஒரு துளியும் குந்தகப்படுத்தவில்லை என்று நான் பணிவன்போடு எடுத்துச் சொல்லிக்கொள்ளுவேன்.

ஆனால், இவ்வளவு சொல்லுகின்ற நான், மற்றொன்று தெளிவாகத் திட்டவட்டமாகச் சொல்லுவேன், எங்களுடைய வேலை சட்டசபையிலே மட்டும் முடிந்துவிடுவதல்ல; அது மட்டுமல்லாமல் சட்டசபையிலேகூட எங்களுடைய வேலை சிறப்படைய வேண்டும் என்றால் வெளியிலே எங்களுக்கு நீங்கள் எங்களுடைய கரத்தை எந்த அளவுக்கு வலுவாக்குகின்றீர்களோ, வெளியிலே நீங்கள் எவ்வளவு தி. மு. க. - வை எஃகு கோட்டை ஆக்குகின்றீர்களோ, தி. மு. க. - வுக்கு எவ்வளவு எண்ணற்ற வாலிபத் தோழர்கள் தங்களைத் தாங்களே ஒப்படைக்கின்றார்களோ, அதைப் பொறுத்துத் தான் சட்டசபையிலே எங்களுக்கு மதிப்புக் கிடைக்குமே தவிர, 15 - பேர் என்ற எண்ணிக்கையைக் காட்டி நாங்கள் மதிப்புப் பெற முடியாது.

15 பேர் நாங்கள்; 150 பேர் அவர்கள். எவ்வளவுதான் நாங்கள் எங்களுடைய முழு ஆற்றலைத் திரட்டி எந்த வாதங்களைச் சொன்னாலும், அந்த வாதங்களை யெல்லாம் கேட்டு ரசிக்கின்ற காங்கிரஸ் அமைச்சர்கள்—ரசிக்கின்ற காங்கிரஸ் அமைச்சர்கள் என்று நான் சொல்லுகின்ற நேரத்தில், ஏதோ பெருமைக்குச் சொல்லுகின்றேன் என்றுகருதுவீர்கள். பெருமைக்கு அல்ல—உண்மையிலேயே ரசிக்கின்றார்கள்; ரசிப்பது மட்டுமல்ல, அதைப்போலப் பேசவேண்டும் என்று தங்களுடைய கட்சிக்காரர்களுக்குச் சொல்லுகின்றார்கள்; சொல்லுவது மட்டுமல்ல, பயிற்சியே நடக்கின்றது; பயிற்சி நடப்பது மட்டுமல்ல, அதை அவ்வப்போது பேசிப் பார்த்துக் கொள்ளுகின்றார்கள்.

# துகில் உரிந்த காட்சி

உதாரணம் உங்களுக்குத் தேவையானால் நாளைக்கும் மறு நாளை காங்கிரஸ் கூட்டம் நடந்தால் ஒரு பிரசங்கியாவது அடுக்கு மொழி ஒரு ஐந்து நிமிஷம் பேசி, இது, என்ன, அண்ணாதுரைக்குத் தான் தெரியுமா, இதோ நான் பேசுகின்றேன், என்று பேசிக் காட்டுவார். இப்படி, அந்தக் கட்சியிலே பல ஏகலைவர்கள் தோன்றியிருக்கின்றார்கள். அதற்குக் காரணம் 15 பேராக நாங்கள் இருந்தாலும், கடமையைச் செய்கின்றோம். ஆனால் இந்த 15 பேர் எவ்வளவு ஆற்றலைக் காட்டினாலும், கடைசியில் ஓட்டு எடுக்கும்போது, எழுந்திரு என்றால் நாங்கள் 15 பேர் தான் எழுந்திருக்கின்றோம், தீர்மானத்தை ஆதரித்து; அதை எதிர்த்து, என்றால், 150 பேர் எழுந்திருக்கின்றார்கள்.

சட்டசபையில் இதுவரையில் பல பிரச்சனைகளைப்பற்றி விவாதம் நடந்ததே தவிர, 2 பிரச்சனைகளில்தான் ஓட்டு எடுப்பு நடைபெற்றது. இந்த 2 பிரச்சினைகளை நீங்கள் அலசிப்பார்த்தால் தி. மு. க.வினுடைய அரசியல் தெளிவு உங்களுக்கு ஓர் அளவுக்கு விளங்கும். எல்லாவற்றிலும் ஓட்டு எடுக்கவில்லை. டால்மியாபுரத்திற்கு கல்லக்குடி என்று பெயர் வைக்கவேண்டும் என்பதுபற்றி ஓட்டு எடுக்கவில்லை; ஏனென்றால், அது கட்சிக்குமட்டும் சம்மந்தமான பிரச்சனை, என்று சிலபேர் சொல்லக்கூடும் என்ற காரணத்தால், அது இப்போதைக்குத் தேவையில்லை என்று ஓட்டு எடுக்கவில்லை.

இரண்டு பிரச்சனையில் மட்டும் ஓட்டு எடுத்தோம். ஒன்று, கவர்னர் பெருமானுடைய பேருரையில் இந்தச் சென்னைக்குத் தமிழ் நாடு என்ற பெயர் வைக்காததைக் கண்டித்து, தமிழ்நாடு என்ற உரிமைப் பெயர், உரிய பெயரை வைக்கவேண்டும் என்று கவர்னர் பெருமான் இதில் குறிப்பிடாததற்காக, இந்த பேருரையைக் கண்டிக்கின்றோம், என்று அந்த வெட்டுப் பிரரேபணையின் பேரிலே, நாங்கள் ஓட்டு எடுப்பு நடத்தினோம்.

எதிரிலிருந்த காமராசர் கூட கேட்டார், என்ன அது, ஓட்டு எடுக்க வேண்டுமா என்று. அவர் சாதாரணமாகக் கேட்டார், என்ன ஓட்டு எடுக்கவேண்டுமா என்று. நானும், ஆமாம் என்றேன். மறுபடியும், அவர் கொஞ்சம் அழுத்திக்கேட்டார், என்ன, இதற்கா எடுக்கவேண்டும் என்று. நானும் கொஞ்சம் அழுத்தி,ஆமாம் இதற்குத்தான்என்றேன்.அதற்குப்பிறகு ஓட்டு எடுப்பு நடந்தது. இப்படிச் சொல்லுகின்ற நேரத்தில், உங்களுக்கு ஒன்று சொல்லிவிட வேண்டும், சட்டசபை நடவடிக்கையைப் பொறுத்தவரையில் உட்கார்ந்து கொண்டே பேசுகின்ற ஒரு பெரிய பாராளுமன்றப்பேச்சாளி இன்றைய சட்டசபையில் நம்முடைய முதல் மந்திரி காமராசர்தான். அவர் எழுந்து எதுவும் பேசமாட்டார். எழுந்து எதுவும் பேசாததால் பத்திரிக்கையிலும் வராது; சட்ட மன்றப் புத்தகத்திலும் ஏறாது. உட்கார்ந்துகொண்டே யார் பேசுவதற்கும் ஏதாவது பதில் சொல்லுவார். அப்படி ஒரு சமயம் ஒத்திகை நடத்துகினறார் என்று கருதுகின்றேன். ஒரு சமயம் அடுத்த தடவை பேசக்கூடும்.

ஓட்டு எடுப்பு நடந்தது. தமிழ் நாடு என்ற பெயர் இருக்க வேண்டும் என்பதற்கு 15-பேராக உள்ள தி. மு. க. வினர், கம்யூனிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள், பிரஜா-சோஷியலிஸ்டுகள், காங்கிரஸ் சீர்திருத்த கமிட்டியினர், சுயேச்சைகளில் பலபேர், எல்லோரும் எழுந்து நின்றனர். மொத்தம் நாற்பதோ நாற்பத்து ரண்டு பேரோ வேண்டுமென்று ஓட்டளிததனர்.

தி.மு.க.வைச் சார்ந்த 15 பேரில் 14 பேர் வேண்டும என்பதற்கு ஓட்டளித்தனர். மற்ற ஒருவரான கல்லக்குறிச்சியைச் சார்ந்த நடராசன் என்பவர் அன்றைய தினம் தேர்தல் வழக்கிருந்ததால் வரமுடியாது போய்விட்டது. மற்றக் கட்சிகள் அப்படியல்ல; பல பேர் வரவில்லை.

தீர்மானத்திற்கு எதிர்த்து என்றார்கள்—மள மள என்று எழுந்திருந்தார்களே 150 பேர்- காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தவர்கள். அவர்களிலே பல பேர் கிழவனுக்கு மாலையிட்ட இள நங்கைபோலல்லவா காட்சியளித்தனர்! மற்றவர்களைப் பார்க்க எவ்வளவு கூசினர்! தங்களின் கால் பெரு விரல்களையல்லவா பார்த்துக்கொண்டிருந்தனர்!

வீராதி வீரர்களெல்லாம் எழுந்து நின்றார்களே!

அதற்கு புராணப்படி ஒரு எடுத்துக்காட்டு கூற வேண்டுமென்றால் பாரதத்திலே ஒரு காட்சி உண்டு.

துரௌபதி துகில் உரியப்பட்ட காட்சியைத்தான் சொல்லவேண்டும். சகல தருமத்தையும் தெரிந்த தருமன் இருந்தும், கதையைக் கையிலெடுத்த பீமன் இருந்தும், காண்டீபத்தை கொண்ட அர்ச்சுனன் இருந்தும், நகுலனும் சகாதேவனும் உடனிருந்தும் துயிலுரியப்பட்ட காட்சியைத் தான் கூறவேண்டும். அப்போது கதை இருந்து எதிர்க்க முடியவில்லை—காண்டீபம் இருந்தும் போராட முடியவில்லை — தருமம் தெரிந்தும் வலியுறுத்த முடியவில்லை— பேடிகளைப்போல நாமிங்கே இருக்கின்றோமே, நம்முடைய அருமை மனைவியல்லவா துகிலுரியப்படுகின்றாள் என்ற துக்கத்தில் தலையைத் தொங்க விட்டுக்கொண்டு நின்றதாகப் பாரதத்திலே படித்துக் காட்டப்படுகிற காட்சிகளை நான் சென்னை சட்டசபையிலே பார்த்தேன்; துகிலுரியப்பட்ட நேரத்திலே தலை குனிந்துநின்றார்களல்லவா! இந்தக் காலத்திலே துகிலுரிந்தாலும் பல பேர் தலைகுனியமாட்டார்கள் என்பது எனக்குத் தெரியும்! ஆனால் தமிழ்நாட்டினுடைய மானம் பறிக்கப்பட்டது — அப்போது தமிழனிடத்திலே ஓட்டு வாங்கிச்சென்ற காங்கிரஸ் நண்பர்கள், இந்த நாட்டுக்குத் "தமிழ் நாடு" என்ற பெயர் வேண்டாமென்று ஓட்டளித்திருககின்றார்கள்.

நண்பர்களே; தமிழர்களே, திராவிடர்களே, இலக்கியம் படித்தவர்களே நீங்கள் இவர்களை எந்தப் பட்டியலிலே சேர்க்கிறீர்கள்? இந்த நாட்டுக்குத் "தமிழ்நாடு" என்ற பெயர் வேண்டாம, என்பதற்காக ஓட்டளித்தவர்களை நீங்கள் எந்தப் பட்டியலிலே சேர்க்கிறீர்கள்? அவர்கள் பிறந்தது

தமிழ் நாட்டில்— வாழ்ந்துகொண்டிருப்பது தமிழகத்தில் — அவர்கள், எந்தக் காரணத்தாலாவது நாடு கடத்தப்பட்டாலொழிய இறக்கப் போவதும் தமிழ் நாட்டிலேதான்! அவர்கள் தொட்டிலிலே பேசுகிற மொழி தமிழ்— கட்டிலிலே இன்றைய தினம் கொஞ்சுகிற மொழி தமிழ்— அவர்கள் வாழுகின்ற நாட்டுக்கு மட்டும் "தமிழ்நாடு" என்ற பெயர் இல்லை! அந்தப் பெயரை வையுங்கள் என்று நாங்கள் சொல்லுகின்ற நேரத்தில் தேவையில்லை என்று சொல்லுவதற்கு 150-பேர் எழுந்து நின்றார்கள்! அதற்குத்தான் நாங்கள் ஓட்டெடுத்தோம —பைத்தியக்காரத்தனமான எண்ணத்தினாலே அல்ல! எங்களுக்குத் தெரியும், நாங்கள் 40-பேர்தான் இருப்போம், அவர்கள் 150-பேர் இருப்பார்கள் என்று. ஆனால் ஓட்டு எடுத்ததனுடைய காரணம், அது சட்ட மன்றத்தினுடைய ஏட்டிலே ஏறியிருக்கும்! அது எதிர்கால வரலாறு! நம்முடைய பிள்ளை கூட அல்ல, பேரன் படிக்கப்போகிறான். இந்த நாட்டுக்குத் 'தமிழ் நாடு' என்ற பெயர் ஒரு காலத்தில் இல்லையாமே — 'மதராஸ்' என்று இருந்ததாமே--என்று நம்முடைய பேரன் கேட்பான். பக்கத்து வீட்டிலே இருக்கின்ற மற்றொரு பையன் 'அதென்ன பைத்தியக்காரத்தனம்! மதராஸ் என்று ஏன் பெயர் வைத்தார்கள் என்று கேட்பான்!

"அதை மாற்றுவதற்கு என்னுடைய தாத்தா முயற்சி செய்தார் தெரியுமா?" என்று இவன் சொல்லுவான, 'என்ன முயற்சி' என்று அவன் கேட்பான்.

"எங்கள் கழகத்தில் 15-பேர் சட்ட சபையிலே இருந்தார்கள். அவர்கள் தமிழ் நாடு என்று பெயர் வைக்கவேண்டும் என்று வாதாடினார்கள்" என்று இவன சொல்லுவான்.

அது வேண்டாமென்று, சொன்னவர்கள் யார்?' என்று அவன் கேட்பான்.

உடனே 'டேய்! உன் எதிர் வீட்டில் இருக்கிறாரே, அவருடைய பாட்டனார்' என்று இவன் சொல்லுவான்! (தொடரும்)

## இலக்கிய உலகில்....

கவிஞன் கீட்ஸ் 26-வது வயதில் காலம் சென்றான். பெருங்கவிஞன் ஷெல்லி 30-வது வயதில் முடிந்துவிட்டான். பைரனும் 36 வயது வரைதான் வாழ்ந்திருக்கிறான்; நமது சிறுகதை மன்னன் புதுமைப் பித்தனும், இளவயதில்தான் போய் விட்டார். ஆயினும் இவர்களையெல்லாம், மரணத்தால் என்ன செய்துவிட முடியும்? இலக்கிய உலகில் ஏகச் சக்கராதிபதியாக வாழ்கிறார்கள்—இன்னும் வாழ்வார்கள். காரணம் வேறு எதுவுமில்லை—அவர்கள் காலத்தின் அருமை உணர்ந்து வாழ்ந்தவர்கள், அவ்வளவுதான்!

என். எஸ். கே.

'திராவிட சினிமா' ஜன. 1956

# கலைவாணா, என்று காண்போம்?

[வா. செ. பழநிசாமி *பி.ஏ.*]

கலைவானில் சுடர்விட்டு சிரித்த விண்மீன்
கண்மூடி மண்மீது விழ்ந்த தந்தோ!
விலைகூற வொண்ணாத தமிழர் செல்வம்,
வேரற்ற மரம்போல விழ்ந்த தய்யோ!
சிலைபோல நாமானோம் செய்தி கேட்டு,
திடுக்கிட்டோம்; தென்னகமே தேம்பி நிற்கும்
நிலைகண்டோம்; கலைவாணா ஏன் மறைந்தாய்?
நின்சிரிப்பை இனிநாங்கள் என்று காண்போம்?

தெங்குதரும் இன்சுவையோ? தேனோ? பாகோ?
தெவிட்டாத தீந்தமிழோ? மழலைப் பேச்சோ?
நுங்குதரும் தண்ணுணர்வோ? மேகக் காட்டில்
நொடிப்பொழுது ஒளியூட்டும் மின்னல் வீச்சோ?
மங்காத புகழ் கிருஷ்ணன் நடிக்கும் காட்சி
மறையாத ஓவியமாய் திரையில் கண்டோம்;
அங்கமெல்லாம் பூரித்துப் பொங்க உம்மை
அவனியிலே இனிநாங்கள் என்று காண்போம்?

தென்னகத்தில், 'மேல்நாட்டில், மேடை மீதும்
திரையினிலும் 'கோமாளி' பலருண்டானால்
என்னேஸ்கே என்றாலோ சீர்திருத்த
எண்ணத்தைச் சிரிப்பினிலே தூண்டி விட்டு,
அன்றாட வாழ்க்கையிலே, மதத்தில், சாதி
அரசியலில் மலிந்தகுறை திரையில் காட்டிக்
குன்றாத கொள்கைக்கே உழைத்த வீரன்
என்றுபொருள்; கலைவாணா, என்று காண்போம்?

உன்வீட்டார் படுந்துன்பம் பெரிதென் றாலும்
ஒண்தமிழர் படுந்துன்பம் கூற வொண்ணா!
என்பதனை ஏனறியா தொளிந்து கொண்டாய்?
ஏக்கத்தால் கண்ணீரைத் துடைத்து நிற்கும்
என்தமிழர் உன்முகத்தை, தமிழை வெல்லும்
எழிற்சிரிப்பை, கொடைத்திறத்தை, வில்லுப் பாட்டை
என்றினிமேல் கேட்பார்கள்? அய்யகோ நீ
எங்கு சென்றாய்? கலைவாணா ஏன் மறைந்தாய்?

காலைமுதல் மாலைவரை கழனி தன்னில்
கால்கடுக்கப் பாடுபடும் உழவர், மற்றும்
ஆலையினில் இயந்திரத்தோ டுழைத்து நிற்போர்,
அரைவயிறு நிரம்பாத ஏழை மாந்தர்,
சாலையினில் கல்லுடைப்போர், வறுமை கடத்தால்
தாங்கவொணாத் துன்பத்தால் தவிப்போர், ஆட்சி
வேலையினில் அமர்ந்திருப்போர், தமிழ கத்தின்
அரசியலில் ஈடுபட்டோர், அனைவ ருக்கும்

கவலையினை இமைப்பொழுதில் நீக்கி யென்றும்
களிப்பூட்டும் கலைவாணர் இன்று நம்மேல்
கவலையினை நீங்காத சுமையாய் வைத்து
கண்மூடிக் காலத்தில் ஒன்றாய் ஆனார்.
எவருண்டு மதுரத்தின் மனத்தைத் தேற்ற?
எவருண்டு தமிழ்மக்கள் இன்னல் போக்க?
அவரின்றி வேறொருவர் இனிமே லில்லை,
அவனிபுகழ் கலைவாணா என்று காண்போம்?

# கனவுலகில்!

—[அண்ணல்]—

"கதவைத்திறவாய்! சத்யபாமா, கதவைத் திறவாய்......"

"செச்சே! அதே பழைய மெட்டுத்தானு? பூலோகம் போய் வருகிறீர்களே. அடிக்கடி புதியமெட்டு கிடைக்கவில்லையோ!"

"அடுத்த முறை போய் வரும் போது, ஆகட்டும். பாமா! குயில் குரல் காட்டிவிட்டு, கோலமயிலின் ச்சாயலைக் காண முடியாமல் கதவடைத்திருப்பதேனே இன்னும் ...கதவைத்திறவாய்......பாமா.... சத்யபாமா கதவைத் திறவாய்!"

"போதும் போதும்! இதோ, கதவைத் திறந்துவிட்டேன்...... கொஞ்சம் வாயை மூடும்"

[பாமா சகிதம் உள்ளே வருகிருர், கிருஷ்ண பரமாத்மா. அவரைச் சுற்றிச் சுற்றி வந்துபார்க்கிருள், பாமா]

"என்ன பாமா! ஏன் அப்படிப் பார்க்கிருய்?"

"நேராகப் பூலோகத்திலிருந்து இங்குதானே வருகிறீர்?"

"ருக்மணி வீட்டுக்குச் சத்தியமாகப்போகவில்லை!......தீர்ந்ததா உன் சந்தேகம்..."

"பூலோகம் போய்விட்டு வெறுங் கையுடன் வந்திருக்கிறீரே என்று பார்த்தேன்!"

"வெறுங்கையுடன் வரவில்லை. இதோ, பார்!"

[தலையிலிருக்கும் கிரீடத்தை எடுக்கிருர். அதிலிருந்து பொலபொலவென்று மலர்கள் உதிர்கின்றன]

"வெறும் மலர்கள்! இதற்குத்தானு பூலோகம் போனீர்...தேவலோகத்திலில்லாத மலர்களா..."

"பக்தர்கள் அன்புடன்சொரிந்த மலர்கள்...இதைவிட சிறப்பான பொருள் வேறுண்டோ, பாமா!"

"ஆமாமாம்! என் வாயை மூடத்தான் கற்றிருக்கிறீர், நீர். இதோ பார்த்தீரா..."

[என்று "மித்திரன்" பத்திரிகையை எடுத்து நீட்டுகிருள், பாமா. கிருஷ்ணனுக்கு ஆச்சரியமாயுள்ளது]

"பாமா! இது பூலோகத்துப் பொருள் அல்லவோ? இங்கே எப்படி வந்தது?"

"நாரதர் கொண்டுவந்தார்..."

"அவன் இங்கே வந்தானு..."

[வார்த்தையை முடிக்காமல், பத்திரிகையைப் பிரிக்கிருர்.

**உடுப்பி:-** **உடுப்பி, பர்யாய அத்மார் மடத்தில் கிருஷ்ண பூஜை நடைபெற்றது. விபூதேஷ் தீர்த்த சுவாமிஜி முன்னின்று நடத்தி வைத்தார். 80-லட்சத்துக்கு மேற்பட்ட மலர்கள், பக்தர்களால், கிருஷ்ண பரமாத்மாவுக்கு குவிந்தது.**

என்கிற செய்தி, தென்படுகிறது.]

"பாமா! பாமா!! பார்த்தாயா, இதை........அந்த மலர்கள் தான் இவை...80-லட்சம் உள்ளது..."

"முகத்தைப் பாருங்கள் முகத்தை! 80-லட்சம் பூக்களுக்கு இப்படி அடித்துக்கொள்ளுகிறீரே ......இதோ இந்தச் செய்தியைப் பார்த்தீரா?"

[பாமா, பத்திரிகையைப் புரட்டி இன்னெரு பக்கத்தைக் காட்டுகிருள்.

**காஞ்சிபுரம்:-** **காமகோடி பீடம் ஜகத்குரு சங்கராச்சாரியசுவாமிகளுக்கு, கனகாபிஷேகம் நடைபெற்றது. பக்தகோடிகள், பவுன்களாலேயே அபிஷேகம் செய்தனர். 40,000 ரூபாய் பெறுமானமுள்ள பவுன் நாணயங்கள் அபிஷேகம்செய்யப்பட்டன.**

"ஏன் அப்படி விழிக்கிறீர்? பார்த்தீரா, இதை...!"

"பார்த்தேன். இதற்கென்ன?"

"என்னவா? நீர் பரமாத்மா... சர்வ லோகநாயகர்...... ஆனல் உமக்குக் கிடைப்பது வெறும் மலர்கள். ஆனல் கேவலம், நீர் காப்பதாகச் சொல்லும் மானிட உலகத்தைச் சேர்ந்த ஒரு நரனுக்கு தங்கத்தாலேயே அபிஷேகம் நடக்கிறது அபிஷேகம்!"

"பக்தனுக்குச்செய்தால்நமக்குச் செய்தது போலத்தானே, பாமா!"

"இந்த மழுப்பல் வேண்டாம், என்னிடம். பக்தர்களுக்கே எல்லா மரியாதைகளும் கிடைக்கட்டும் என்று நீரும் அந்தப் பரமசிவனும் பேசாமல் தேவலோகத்தில் தங்கி விடுவதுதானே? அதை விட்டுவிட்டு ஊருக்கு ஊர் கோயிலும், அதற்கென்று ஆயிரக்கணக்கான சொத்துக்களும், அதைக் கண்காணிக்க ஏஜண்டுகளையும் ஏன் வைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? ஒரு பக்தனுக்கு கனகாபிஷேகம்! பக்தர்களைக் காக்கும் பரமனுக்கு மலராபிஷேகம்!! செச்சே...வெட்கமாயில்லை, உங்களுக்கு."

[நாராயணு! நாராயணு!!—என்கிற குரல் கேட்கிறது. நாரதர், வருகிருர்......]

"நாரதரே! என்னை நிம்மதியாகயிருக்கவிடமாட்டீர் போலும்...... நான் வருவதற்குள் இதென்னய்யா!"

"அபச்சாரம்! அபச்சாரம்! பிரபோ, தாங்கள் கோபிக்கும்படி நான் அப்படியேதும் தவறு செய்யவில்லையே..."

"தவறு செய்யவில்லை. சண்டை மூட்டியிருக்கிறீர்... இந்தப் பேப்பரை உம்மை யார் இங்கே கொண்டுவரச் சொன்னது?"

"பூலோகத்துச் சேதிகள் தேவலோகத்துக்கும் தெரியவேண்டுமல்லவா...... அதனல் கொண்டு வந்தேன்...... அம்மா! இப்படிக் கொடுங்கள், அதை. என்னல் ஏன் சண்டை உங்களுக்குள்?"

[பத்திரிகையை வாங்கிக் கொள்ளுகிருர் நாரதர். பாமா, அவரிடம்]

"நாரதரே! பக்தகோடிகளுக்கு இப்போது என் கணவரிடம் நம்பிக்கையில்லையா?...... ஏன் திகைக்கிறீர்!...... உண்மையைச் சொல்லும். ஒரு நரனுக்குக் கனகாபிஷேகம்! இவருக்கு மலராபிஷேகம்!! என்ன காரணம்?"

"காரணமில்லாமலில்லை, தேவி! சங்கராச்சாரியார் மனிதர்தான் உங்கள் அதிகாரப்படி. ஆனல், அவருடைய கியாதி—பெருமை—சிறப்பு எல்லாம் பரப்பப்படுகிற அளவுக்கு, வசதிகள் இருக்கின்றன"

"விளங்கும்படிச் சொல்லும் நாரதரே!"

"இதோ இந்தப் பத்திரிகைகள் போன்றவை அடிக்கடி அவாது பெருமையை நரர்களுக்கு எடுத்துச் சொல்லுகின்றன. உதாரணத்

துக்கு இதோ ஒரு சேதி......... படித்துப் பாருங்கள்......"

[என்று 'மெயில்' ஏட்டைத் தருகிறார்.

"இதென்ன நாரதரே! நமக்குப் புரியாத எழுத்தாயுள்ளதே......"

"ஓகோ! இயேசுநாதரைச் சேர்ந்தவர்கள் மொழி உங்களுக்குத் தெரியாதோ........நான் படித்துச் சொல்லுகிறேன்.......இந்தச் சங்கராச்சாரியாரைப் பார்க்க ஒருவர் போனாராம்..."

"ஊம்!"

"திடீரென்று கண் குருடாகி விட்டதாம்......"

"ஏன், திடீரென்று கண் குருடாயிற்றாம்?"

"இதென்ன தேவி! நீங்களும் இந்த தி. மு. க. காரர்களைப்போல 'ஏன்?' என்று கேள்வி போடுகிறீர்கள்......"

"சரி, சரி. சொல்லும்."

"கண் குருடாயிற்றா? பிறகு, சங்கராச்சாரியார் கடாட்சத்தால், மீண்டும் கண்கள் வந்தனவாம்."

"பெரிய அதிசயமாயுள்ளதே!"

"உங்களுக்கே இப்படியிருந்தால் இதைக் கேள்விப்படும் பாமர ஜனங்களுக்கு எப்படியிருக்கும்? தரிசித்தால் நோய் போகும்...... கைபட்டால் குன்மம் நீங்கும்....... பிரசாதம் பெற்றால் பிறவித்துயர் நீங்கும் என்று பாமரர்கள் ஓடுகிறார்கள் அவரிடம்......"

"ஆமாம்! கண்ணிழந்தவர், கண் பெற்றாரென்று. இந்தப் பத்திரிகைக்காரருக்கு சொன்னது யார்?"

"யாரா! சாட்சாத் சங்கராச்சாரியாரே அந்த ஆளை அழைத்து, பக்தகோடிகளுக்குக்காட்டினாராம்"

"சுய விளம்பரமா?"

"என்ன பெயரில் வேண்டுமானாலும் சொல்லுங்கள்......இப்படிப்பட்ட சேதிகளைப் பரப்ப இந்தப் பத்திரிகைகள் வேறு இருப்பதால் யோகம் அடிக்கிறது பக்தி வேடம் பூண்டவர்களுக்கு!"

"பரமனைவிட, பக்தர்கள் காலில் விழும் பைத்தியமும் அதிகரிக்கிறது மக்களுக்கு......"

"பைத்தியம் என்று சொல்லாதீர்கள் தேவி! சங்கராச்சாரியாரைத் தரிசிக்க மிகமிகப் படித்தவர்கள், வக்கீல்கள், இன்சினீயர்கள், எல்லாம் வருகிறார்கள்......"

"அவர்களும் இதுபோன்ற 'சித்துக்களை நம்புகிறார்களா? என்ன!"

"நம்புகிறார்களோ, என்னவோ! மூலக் கடவுள் மூன்று...முப்பத்து முக்கோடி தேவர்கள்...விநாயகர், சுப்பிரமணியம், ராமர், கிருஷ்ணன் ...போதாக் குறைக்கு சாமுண்டி, சங்கிலிக் கருப்பன், மரத்தடி முனியன் மாகாளி இத்தனையிருந்தும் இந்துக்கள் ஆண்டுதோறும் 'வேளாங்கன்னி' மாதாவையும் விடுவதில்லை — நாகூருக்கும் போகத் தவறுவதில்லை..."

"வேளாங்கன்னி, கிருத்துவர்கள் பூஜிக்கும் இடமல்லவோ!"

"ஆமாமாம்! வேளாங்கன்னி, கிருத்துவர்களுக்கு. நாகூர், முஸ்லீம்களுக்கு. அவ்வளவையும் தேடிவிட்டு. அதுவும் போதாமல், சங்கராச்சாரி, அகோபில மடத்து ஜீயர், அக்கிரகாரத்து பெரியசாமி என்றும் அலைகிறார்கள்..."

"வேடிக்கையான இந்துக்கள் தான் நாரதரே! ஏதாவது ஒன்றின் மேல் இருக்கக்கூடாதோ, பக்தி?"

"உண்மையான பக்தியிருந்தால் தானே தேவி? இப்போது 'பக்தி' என்பதே ஒரு பாஷாணாகிவிட்டது தெரியுமா!"

"பாஷன், என்றால்?"

"......அதாவது நாகரீகம்! குழந்தை குட்டிகளோடு காசிக்குப் போய் வந்தேன் என்று சொல்லுவது, வாராவாரம் திருப்பதிக்குப் போய் வருகிறேன் என்று சொல்லுவது, ஆண்டுதோறும் சீதாகல்யாணம் செய்யத் தவறமாட்டேன் என்று சொல்லிக்கொள்வது......எல்லாம் ஒரு பெருமைக்குரிய காரியமாகவே பூலோகத்தில் கருதப்படுகிறதே ஒழிய, உண்மையான பக்தன் ஒருவன்கூட இல்லை!"

[இதுவரையில் பேசாதிருந்த கிருஷ்ணபரமாத்மா, துள்ளிஎழுந்து]

"நாரதரே! மூடும் வாயை. உண்மையான பக்தி இல்லாத காரணத்தால்தான், எண்பது லட்சம் மலர்கள் தூவி என்னை அர்ச்சித்தார்களோ..."

"மன்னிக்க வேண்டும் பெருமானே! உண்மையான பக்தியுடன் "நாராயணா! நாராயணா!" என்று கூவிய கஜேந்திரனுக்கு மோட்சம் கொடுக்க ஓடினீர்களே, அப்போது அவன் எத்தனை லட்சம் மலர்களைத் தூவினான்?"

"நாரதரே! உள்ளத்தில் பக்தியுடன் கல்லாலடித்தபடியே பூசை செய்த சாக்கிய நாயனாருக்குச் சிவபதவி கிடைத்ததையும் சொல்லுமே!"

[கிருஷ்ணனுக்குக் கோபம் வருகிறது]

"பாமா! இப்போது நீ என்ன சொல்லுகிறாய்?"

"கடவுள் பெயரைச் சொல்லிக் காலந்தள்ளுபவர்களிடம் வருகிற அளவுக்கு மக்களுக்கு உங்களிடம் கவனம்வருவதில்லை, என்கிறேன்"

"இவ்வளவுதானே! நாரதரே"

"பிரபோ!"

"இன்றே நீர் பூலோகத்துக்குப் புறப்பட்டுப்போய்..."

"போய்..."

"அந்தச் சங்கராச்சாரியாரை— —குருடனுக்குக் கண் கொடுத்ததாகச் சொன்னாரே அந்தச் சங்கராச்சாரியாரிடம் போய் — சில மாதங்களுக்கு முன் நீர் வியாதியாய்க் கிடந்தபோது ஏன் டாக்டரை அழைத்தீர்?—குருடனுக்கே கண் வழங்கும் உம்மால் ஏன் உமது வியாதியைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லை? இவ்வளவு சித்தியுள்ள உம்மால் ஏன் பாலாற்றில் தண்ணீர் வரச்செய்ய முடியவில்லை...என்று எல்லாம் கேட்டு வரவேண்டும். இன்னும் ஒன்று, இவருடைய முதல் குரு, சங்கராச்சாரியார் எப்படிச் செத்தார் என்று கவனமுள்ளதா உமக்கு?"

"ஆமாம்! ஏதோ வியாதி வந்து......"

"ஆமாம்! அதையும் போய்க் கேளும்......"

"இப்படியெல்லாம் கேட்டால் என்னையும் தி. மு. க. கட்சியில் சேர்த்துவிடுவார்கள் பிரபோ! நான் போகமாட்டேன்..."

"அவரைப் போகச் சொல்லுகிற நீங்களே போய் இந்தப் புரட்டுகளை மக்களிடம் சொல்லிவிட்டு வாருங்களேன் !"

"பாமா! உன்னை விட்டு விட்டு..."

"சே! கடவுளான நீங்களே இப்படியிருப்பதால்தான், பக்தர்கள் அடிக்கிறார்கள் கொட்டம். உண்மையான பக்தியும், அழிந்து வருகிறது.

[நாரதர், நழுவுகிறார். பரந்தாமன், முந்தானையைப் பிடித்திழுக்கிறார். இந்த ரசமான கட்டத்தில், 'என் கனவு கலைந்து விட்டது! என் துணைவி, என்னைத் தட்டி எழுப்பிக் கொண்டிருந்தாள்!']

★

எண் எம் 4642 தொலைபேசி அலுவலகம்

# வடாற்காடு மாவட்ட தி.மு.க. மாநாடுகள்!

**21--9--57**

## இந்தி எதிர்ப்பு மாநாடு

தலைவர்:

**சுவாமி அருணகிரிநாதர்**

திறப்பாளர்:

**சி. வி. எம். அண்ணாமலை**

**22--9--57**

## தி. மு. க. அரசியல் 3-வது மாநாடு

தலைவர்:

**அன்பில்-தர்மலிங்கம்**

திறப்பாளர்:

**வெ. கிருட்டிணமூர்த்தி, எம். ஏ.,**

## அண்ணா, நெடுஞ்செழியன்

| | | |
|---|---|---|
| கருணாநிதி | என். வி. நடராசன் | அரங்கண்ணல் |
| சம்பத் | மதியழகன் | தில்லை-வில்லாளன் |
| அன்பழகன் | அப்பாதுரை | தாமரைச்செல்வன் |
| கண்ணதாசன் | சத்தியவாணிமுத்து | கே. ஆர். ராமசாமி |
| ஆசைத்தம்பி | கோவிந்தசாமி | எஸ். எஸ். ராஜேந்திரன் |
| கி. மனோகரன் | சி. பி. சிற்றரசு | டி. வி. நாராயணசாமி |

மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் அனைவரும் கலந்துகொள்வர்.

எம். ஜி. இராமச்சந்திரன் நடிக்கும்

**இன்பக் கனவு**

**அட்வகேட்-அமரன்**

நாடகங்கள் இரவு 9-30 மணிக்கு நடைபெறும்.

கட்டணம்:—

ரூ. 5, 3, 1 பெண்கள் அ௦ 8.

அனைவரும் திரண்டு வாரீர்!

**வரவேற்புக்குழு.**